பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 10 வியாழக்கிழமை 26.08.2021 கதிர் 294

**இனிது ரகசியம் அல்ல!**

அரசியல் கொள்கை கோட்பாடுகளும், நிலைப்பாடுகளும் எப்போதும் ஒரே திசையில் செல்லும் என்று கூற முடியாது. கள நிலைமைகளுக்கும் யதார்த்தங்களுக்கும் நிர்ப்பந்தங்களுக்கும் ஏற்ப நிலைமைகளும் மாறும். போக்குகளும் திசை பக்கம்02 »

## ஒரே நாளில் 4,472 பேருக்குக் கொரோனா; 4 லட்சத்தைக் கடந்தது மொத்தத் தொற்று

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் 4 ஆயிரத்து 472 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டனர்.

இதன்படி நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 4 லட்சத்து 7 ஆயிரத்து 757 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் நேற்று 2 ஆயிரத்து 163 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்து சிகிச்சை நிலையங்களிலிருந்து வெளியேறியுள்ளனர். ☞2

## 119 ஆண்கள், 79 பெண்கள் உட்பட மேலும் 198 பேர் பரிதாப மரணம்!

இலங்கையில் மேலும் 198 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 119 ஆண்களும், 79 பெண்களும் அடங்குகின்றனர்.

இவர்களுள் 30 வயதுக்குக் குறைவான ஆண் ஒருவரும் அடங்குகின்றார் ☞2

# மாகாண சபைத் தேர்தலுக்கான சட்டத்தை ஒழுங்குபடுத்துங்கள்!

## அரசிடம் கூட்டமைப்பு கோரிக்கை



கொழும்பு, ஓகஸ்ட் 26

தற்போதைய கொவிட் தொற்று நெருக்கடிக்குள் மாகாண சபைத் தேர்தல்களை முன்னெடுப்பது சாத்தியமற்றது என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். இந்த நெருக்கடி ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதும் தாமதமின்றி மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்த வேண்டும். அதற்கு வசதியாக, அதற்கான தேர்தல் சட்டங்களை இப்போதே தயாரித்து, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்.

– இவ்வாறு அரசாங்கத்தைக் கோரியிருக்கின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. ☞2

## வவுனியாவில் 49 பேர் மரணம்

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் இந்த வருடத்தில் இதுவரையான காலப் பகுதியில் 49 பேர் கொரோனாத் தொற்றால் மரணமடைந்துள்ளனர். அத்துடன் 3 ஆயிரத்து 585 பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

– இவ்வாறு வவுனியா மாவட்டபதில் அரச அதிபர் தி.திரேஸ்குமார் தெரிவித்தார். ☞2

## யாழில் நேற்றும் ஐவர் கொரோனோவால் பலி

யாழ்ப்பாணத்தில் மேலும் 5 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று உயிரிழந்த 5 பேருக்கே கொரோனாத் தொற்றுள்ளது என அறிக்கையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மருதடி வீதியைச் சேர்ந்த 75 வயதுடைய பெண் ஒருவரும், சங்கானையைச் சேர்ந்த 79 வயதுடைய ஆண் ஒருவரும், சாவகச்சேரியைச் சேர்ந்த 46 வயதுடைய ஆண் ஒருவரும், சுன்னாகத்தைச் சேர்ந்த 65 வயதுடைய ஆண் ஒருவரும், கொக்குவிலைச் சேர்ந்த 82 வயதுடைய பெண் ஒருவருமே உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 218 ஆக உயர்வடைந்துள்ளது.

## முல்லைத்தீவிலும் ஒரே நாளில் நால்வர் கொரோனாவால் சாவு!

முல்லைத்தீவில் ஒரே நாளில் நால்வர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நால்வரே நேற்று இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

முள்ளியவளையின் கணுக்கேணி கிழக்கு, தண்ணீரூற்று, கிச்சியாபுரம் மற்றும் ஒட்டுசுட்டானின் பெரிய சாளம்பன் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 70, 47, 68 வயதுகளையுடைய ஆண்கள் மூவரும், 42 வயதுடைய பெண் ஒருவருமே உயிரிழந்துள்ளனர்.

இதன்படி ☞2

## ஈஸ்டர் தாக்குதல்; 311 பேர் தடுப்பில்

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புடைய சகரான் தலையிலான குழுவைச் சேர்ந்த 311 பேர் தடுப்புக் காவலில் வைக்கட்டுள்ளனர். ஒரு லட்சம் தொலைபேசி உரையாடல்கள் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. 365 மில்லியன் ரூபா பணம் மற்றும் சொத்துக்கள் இதுவரை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

– இவ்வாறு பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் குறித்து ☞2

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதானோர்; பரிந்துரைகளை முன்வைக்க ஆலோசனை சபை



### நியமித்தார் ஜனாதிபதி கோட்டாபய

கொழும்பு, ஓகஸ்ட் 26

பயங்கரவாத நடவடிக்கைகள் சம்பந்தமாக சிறைத்தண்டனையை அனுபவிக்கும் மற்றும் தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளவர்கள் குறித்து கண்டறிதல், விடுதலை செய்தல், பிணை வழங்குதல் உள்ளிட்ட எதிர்காலத் தீர்மானங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு பரிந்துரைகளை வழங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் ஆலோசனை சபை நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை ஜனாதிபதியின் சட்டத்துறைப் பணிப்பாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி ஹரிகுப்த ரோஹனதீர தெரிவித்தார். ☞2

## மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 7 சிறுவர்கள் உட்பட 27 பேருக்குத் தொற்று

யாழ்.மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் சிறுவர்கள் எழுவர் உட்பட 27 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது குறித்த தொற்றாளர்கள் ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

திரும்பும். சில சமயங்களில் U turn போட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அது நெருக்கடி, நிர்ப்பந்தங்களைப் பொறுத்தது.

மஹிந்த ராஜபக்ஷவை வீழ்த்தி ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன, பிறகு அதே மஹிந்தவின் காலடியில் விழும் நிலைமை வரவில்லையா?

இப்போதைய சூழலில் பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டிருக்கும் இலங்கைக்கு மீளுவதற்கு இரண்டு வழிகள்தான் இருக்கின்றன என்கின்றனர் நிபுணர்கள்.

ஒன்று – சீனா போன்ற நாடு ஒன்று தொடர்ந்தும் பெரியளவில் கடன் மற்றும் அபிவிருத்தி உதவிகளை வழங்கி, இலங்கையை அரவணைத்துக் கொள்ள வேண்டும். இலங்கையை நெருக்கடியிலிருந்து தூக்கி விடவேண்டும்.

அல்லது – சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை சரணாகதி அடைய வேண்டும். இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளுக்கு சர்வதேச நாணநிதியம் உதவ வேண்டுமானால் அது விதிக்கும் – எதிர்பார்க்கும் – நிபந்தனைகளுக்கு இலங்கை கட்டுப்பட்டு ஒழுக வேண்டும்.

சீனா, இலங்கைக்கு வழங்கக் கூடிய உதவிகள், வரையறுக்கப்பட்டவை என்பதால், இலங்கை தனது தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளுவதற்கு சீனாவை மட்டும் நம்பியிருப்பது பயனில்லை, நிலைமை எல்லை மீறுகின்றது என்பது கொழும்புக்குப் புரிய தொடங்கியுள்ளதாக அறிய வருகின்றது.

அதனால் மிஞ்சியுள்ள ஒரே மார்க்கமான சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடையத் தயாராகின்றது இலங்கை என்றும் கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டு, அந்தப் பதவியை ஏற்க விருக்கும் மிலிந்த மொறகொடவையும் கூட்டிக் கொண்டு புதிய நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ, சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளைச் சந்திப்பதற்கு விரைவில் வொஷிங்டன் செல்லக் கூடும் என்று கொழும்பு வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

சர்வதேச நாணய நிதியத்திடம் சரணாகதி என்ற U turn முடிவைக் கொழும்பு எடுக்கும் என்றால், ஜெனிவா நிபந்தனைகள் உட்பட பல விடயங்களில் கொழும்பின் போக்கும் நோக்கும் தலைகீழாகும் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அரசியல் கைதிகள் பிரச்சினைக்குத் தீர்வு, காணிகள் விடுவிப்பு, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுகள் என்று பல விடயங்கள் அதிசயமான வகைகளில் கட்டவிழும் என்றும் எதிர்பார்க்கலாம்.

'பொக்கட்'டில் துண்டு விழுந்தால் போக்கே மாறும் என்பது இதைத்தானா?

– மின்னல் –

## ஒரே நாளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அதற்கமைய, நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 3 லட்சத்து 48 ஆயிரத்து 930 ஆக உயர்வடைந்துள்ளது.

## மானிப்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் இருந்து 33 பேரின் மாதிரிகள் இவ்வாறு பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையிலேயே 27 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் சிறுவர்கள் ஏழு பேர் உள்ளடங்கியுள்ளனர்.

8, 9, 14, 14 வயது ஆண் சிறுவர்களும், 13, 16, 16 வயது சிறுமியர்களும் என ஏழு சிறுவர்கள் உள்ளிட்ட 27 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பயங்கரவாதச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இதுதொடர்பில் அவர் தெரிவித்தாவது:–

1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் 13 ஆவது பிரிவுக்கு ஏற்ப இந்த ஆலோசனை சபையை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

முன்னாள் பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தலைமையிலான இந்த ஆலோசனை சபையின் ஏனைய உறுப்பினர்களாக ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி ஏ. ஏ. ஆர்.ஹெய்யந்துடுவ மற்றும் ஓய்வுபெற்ற சொலிசிட்டர் ஜெனரல் சுஹத கம்லத் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத நடவடிக்கைகள் சம்பந்தமாக சிறைத்தண்டனையை அனுபவிக்கும் மற்றும் தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளவர்கள் குறித்து கண்டறிதல், விடுதலை செய்தல், பிணை வழங்குதல் உள்ளிட்ட எதிர்காலத் தீர்மானங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்குப் பரிந்துரைகள் மற்றும் ஆலோசனை வழங்குதல் என்பன இந்தச் சபையின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

நீண்டகாலமாக ஆலோசனை சபை நியமிக்கப்படாத காரணத்தால், இதுவரையில் சிறையில் உள்ளவர்களுக்கு தங்கள் உரிமைகள் தொடர்பான விடயங்களை முன்வைக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இந்த ஆலோசனை சபை நியமிக்கப்பட்டதன் மூலம், கைதிகள் தங்கள் பிரச்சினைகளை முன்வைக்க சந்தர்ப்பம் கிடைக்கும் – என்றார்.

## ஈஸ்டர் தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பொலிஸ்மா அதிபர் சிறப்புக் காணொலி அறிவிப்பை நேற்று வெளியிட்டார்.

அதன்போதே இந்தத் தகவலை அவர் வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு அன்று சஹ்ரான் மற்றும் அவரது குழுவினர் நடத்திய தொடர் குண்டுவெடிப்பு குறுகிய காலத்தில் திட்டமிடப்பட்ட ஒரு குற்றம் அல்ல.

சம்பவத்துக்கு முன் நடந்த பல சம்பவங்களைக் கருத்தில்கொண்டு, இது நீண்டகாலமாக நன்கு திட்டமிடப்பட்ட பயங்கரவாதச் செயல் என்று தெரிகின்றது.

இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட 723 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 311 சந்தேகநபர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். ஒரு லட்சம் தொலைபேசி அழைப்புகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

இந்தக் குற்றவியல் விசாரணை முழு இரகசியமாக நடத்தப்படுகின்றது.

பொதுமக்களுக்குத் தகவல்களை வெளிப்படுத்துவது நீதிமன்ற நடவடிக்கைகளுக்குத் தடையாக அமையலாம் – என்றார்.

## மாகாண சபைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பேச்சாளரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் இந்தக் கோரிக்கையை அரசிடம் முன்வைத்திருக்கின்றார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தேர்தல் சீர்திருத்தம் சம்பந்தமாக ஆராய நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து நான் வலியுறுத்தியிருக்கின்றேன்.

அந்தத் தேர்தலை நடத்துவதற்கான முறைமை குறித்து ஒரு தீர்மானத்துக்கு – முடிவுக்கு – வராமல் இத்தேர்தலை எப்படி நடத்துவதுஎன்ற கேள்வி அரசுத் தரப்பினால் முன்வைக்கப்பட்டது.

2015 பொதுத் தேர்தலுக்கு முன்னரே நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் சீர்திருத்தம் குறித்துப் பேசத் தொடங்கியாயிற்று. நாம் பல கட்டங்களில் ஆராய்ந்து வருகின்றோம். அந்த ஆராய்வுகள் தொடர்பில் ஒரு முடிவும் இன்னமும் எட்டப்படவில்லை. ஆனால் அதற்காக நாடாளுமன்றத் தேர்தலை நாம் நடத்தாமல் இருக்கவில்லை. அதற்குப் பின்னர் இரண்டு பொதுத் தேர்தல்களை – 2015 இலும் 2020 இலும் – நடத்தியுள்ளோம்.

அது மாதிரித்தான் மாகாண சபைத் தேர்தல்களும் கையாளப்பட வேண்டும். அந்தத் தேர்தல்களை எப்படி மறுசீரமைத்து நடத்துவது என்ற சர்ச்சையில் ஒரு முடிவு எட்டப்படவில்லை என்பதற்காகத் தேர்தல்களை நடத்தாமல் நீண்ட பல வருடங்களாக அதனை நிலுவையில் வைத்திருக்க முடியாது. அது மக்களின் இறைமையில் தலையிடும் ஜனநாயக விரோதப் போக்கு.

இருந்த பழைய முறைகளில் மாகாண சபைத் தேர்தலை நடத்தி அவற்றை இயக்குவோம். அத்தேர்தல் மறுசீரமைப்புத் தொடர்பில் இணக்கப்பாடு வரும் போது அந்த முறைமைக்கு மாற்றலாம்; மாறலாம்.

தேர்தல் முறைமைக்கான இணக்கப்பாடு வரவில்லை என்ற காரணத்தைக் காட்டி அத்தேர்தல்களை நடத்தாமல், மாகாண சபைகள் ஜனநாயக முறைமையில் இயங்குவதை இல்லாமல் செய்யாதீர்கள்.

இதுவரை இருந்து, இப்போது இல்லாமலாக்கப்பட்டிருக்கும் மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தை அப்படியே மீளக் கொண்டு வரமுடியும். அதற்கு இரண்டு மார்க்கங்கள் இருக்கின்றமையைத் தேர்தல் சீர்திருத்தத்துக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் கூட்டத்தில் நான் விவரித்துள்ளேன். அதனை சட்டமா அதிபர் திணைக்களமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

அந்த முறைமையில் ஒன்றின் கீழ் தேர்தலை நடத்துவதற்கான சட்ட ஏற்பாடுகளை அரசு இனியும் காலம் பிந்தாமல் முன்னெடுக்க வேண்டும்.

அத்தகைய முயற்சிகளை ஆரம்பித்தால் ஒரு மாத காலத்துக்குள் பழைய மாகாண சபைத் தேர்தல் சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்து விட முடியும்.

இத்தகைய இரண்டு மார்க்கங்களில் ஒன்றின் கீழ், பழைய மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை மீள் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான தனி நபர் சட்டமூலம் ஒன்றை கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் 2019 ஓகஸ்ட் 19ஆம் திகதி நான் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தேன்.

'1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தை நிறுவுவதற்கான சட்டம்' என்ற பெயரில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட அதே தனி நபர் சட்ட மூலத்தைத் தேவையானால் இப்போதும் என்னால் மீண்டும் சமர்ப்பிக்க முடியும்.

அரசு இது விடயத்தில் தானாக நடவடிக்கை எடுக்காவிட்டால் நான் சமர்ப்பிக்கக் கூடிய தனி நபர் சட்டமூலத்தையாவது தன்னுடையதாக ஏற்று, சட்டமாக்க நடவடிக்கை எடுக்கலாம்.

எது, எப்படி என்றாலும், இனிமேலும் காலதாமதம் செய்யாமல் மாகாண சபைத் தேர்தல்களுக்கான சட்டங்களை யாக்க வேண்டும். இதனை எமது கோரிக்கையாக அரசிடம் வலியுறுத்துகின்றோம். – என்றார் அவர். (உ)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வவுனியா மாவட்டத்தின் கொரோனா சமகால நிலைமை தொடர்பாக வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன்பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

28 தரப்பினருக்கு ஊரடங்கு காலப் பகுதியில் தங்களது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளவர்கள் தங்களது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு சகல ஒத்துழைப்புக்களையும் வழங்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் 60 வயதுக்குமேற்பட்ட 5 ஆயிரத்து 500 பேர் இதுவரை கொரோனாத் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளவில்லை. அவர்களுக்கு வீடுவீடாகச் சென்று தடுப்பூசி வழங்கும் செயற்பாடு இராணுவத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் ஊரடங்கால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபா வழங்குவதற்கான நிதி எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. பிரதேச செயலாளர்களினால் வழங்கப்பட்ட தகவல்களின் படி அதனை பெறுவதற்கு 17 ஆயிரத்து 270 தகுதி பெற்றுள்ளனர். அதற்காக 16 மில்லியன் ரூபா நிதி முதற்கட்டமாக வழங்கப்பட்டுள்ளது.

அதன்மூலம் முதற்கட்டமாக 8 ஆயிரம் குடும்பங்களுக்கு அந்த நிதியை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

இரு நாள்களில் அந்தக் கொடுப்பனவை வழங்கி முடிப்பதற்கு தீர்மானித்துள்ளோம். அந்த நிதியை எமது உத்தியோகத்தர்கள் மூலம் நேரடியாகவே வீடுகளுக்கு சென்று வழங்குவார்கள்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் 2021 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 3 ஆயிரத்து 585 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் 49 உயிரிழப்புக்கள் இடம் பெற்றுள்ளன. அத்துடன் 30 வயதுக்குட்பட்ட மேற்பட்ட 96 ஆயிரம் பேரில் 82 சதவீதமானவர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான இரண்டாவது டோஸ் வழங்குவதற்கான திட்டம் அடுத்த கிழமையில் இருந்து ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எமது மாவட்டத்துக்கு தேவையான தடுப்பூசிகளின் விவரங்கள் சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவை கிடைக்கப் பெற்றதும் இரண்டாவது தடுப்பூசி வழங்கும் திட்டம் மாவட்டத்திலே ஆரம்பிக்கப்படும் – என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# சிவபதப்பேறு குறித்த அறிவித்தல்



## தெய்வத் திருமதி
## இரத்தினபூபதி தெய்வேந்திரம்பிள்ளை

சிவபூமியில்: 03 - 01 - 1931

சிவபுரத்தில் : 24 - 08 - 2021

(இளைப்பாறிய ஆசிரியர் – மதவுவைத்தகுளம் அ.த.க. பாடசாலை வவுனியா, நெடுங்கரைச்சேனை அ.த.க. பாடசாலை வவுனியா, பெரியபுலம் மகாவித்தியாலயம் யாழ்ப்பாணம் , இளையதம்பி அ.த.க. பாடசாலை யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு 1ம் வட்டாரத்தினை பிறப்பிடமாகவும், கொக்குவில் தலையாளி, டொரோன்டோ கனடா மற்றும் சிட்னி ஆஸ்திரேலியாவினை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுநிலை ஆசிரியை தெய்வத் திருமதி.இரத்தினபூபதி தெய்வேந்திரம்பிள்ளை 24-08-2021செவ்வாய்க்கிழமை ஆவணித் திங்கள் தேய்பிறை இருமைப் பிறைநாளில் சிட்னியில் சிவபதம் அடைந்தார்.

இவர் காலம்சென்ற செல்லத்துரை, சின்னத்தங்கம் அவர்களின் அன்பு மகளும், காலம்சென்ற சிதம்பரம்பிள்ளை, சிவக்கொழுந்து அவர்களின் மருமகளும், காலம்சென்ற ஆசிரியர் சிதம்பரம்பிள்ளை தெய்வேந்திரம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்.

இவர் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், அருளம்பலம், குணரத்தினம், பராசக்தி, பரமேஸ்வரி, தனலட்சுமி, சிவயோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பராசக்தி இலட்சுமணப்பிள்ளை, பாக்கியலட்சுமி பேரம்பலம், இரத்தினபூபதி சோமசுந்தரம், சொர்ணலிங்கம், மாசிலாமணி, வல்லிபுரம், கங்கைவேணியன் மற்றும் சத்தியரூபவதி குணரத்தினம் (சிட்னி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களான சிவத்திரு.இந்திரகுமார் (பொறியியலாளர் – சிட்னி), சிவத்திரு.சிவகுமார் (பொறியியலாளர் – பிறிஸ்பேண்), சிவத்திரு.சிதம்பரகுமார்(பரன்) (வைத்தியர் – சிட்னி), சிவத்திரு.ஈஸ்வரகுமார் (மருத்துவப்பணியாளர் – சிட்னி) மற்றும் திருமதி.உதயராணி சிவபாலன் ( ஐக்கிய இராச்சியம் , ஆசிரியர்) (பழைய மாணவி – யாழ் இந்து மகளிர் கல்லூரி) , திருமதி.பிரேமகுமாரி மதியழகன் (ஐக்கிய இராச்சியம், ஆசிரியர்) (பழைய மாணவி – வேம்படி மகளிர் கல்லூரி) மற்றும் திருமதி.கலாராணி தேவராஜா (சிட்னி, ஆய்வுகூட நிபுணர்) (பழைய மாணவி – வேம்படி மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புத்தாயாரும் ஆவார்.

பிரேமளச்செல்வி இந்திரகுமார், சிவபாலன், கோணேஸ்வரி சிவகுமார், கீதா சிதம்பரகுமார், மதியழகன், தேவராஜா, சந்திரிகா ஈஸ்வரகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

பிரஷாந், திருமதி.ஐஸ்வர்யா பிரஷாந், தாட்சாயினி ஐசாக், டெக்ஸ்ரர் ஐசாக், கோகுலன், தனுஷன், சிவஆரணி, அனோஜன், நிலாங்கா அனோஜன், யாழினி நிஷாந்த், நிஷாந்த் குணசேகரம், இந்துஜன், கதரின் இந்துஜன், சைலா, அபிலாசினி, அச்சுதன்,சோபன், ஆருணி, ஷாலினி,அனோஜி,அபிமன்,அஷ்சயா, ஆரதி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

தாரகை,அரேயா,ஸ்கை,நெத்தானியல்,எஸ்லா,சார்ழி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அம்மாவின் இறுதிச் சடங்குகள் இன்று (26-08-2021) வியாழக்கிழமை சிட்னி மேற்கு மின்ஞ்சென்பெரியில் மதியம் 12.00 (சிட்னி நேரம்) தொடக்கம் 1.30 மணிவரை நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

கொரோனா தீநுண்மிப் பரவலாலும், தற்போதைய ஒன்றுகூடல் கட்டுப்பாடுகளாலும் சிவப்பேறு தொடர்பான சடங்குகள் குடும்பத்தினருடன் மட்டும் நடைபெறும் என்பதனை அறியத்தருவதோடு, இணையவழி நேரலையை கீழுள்ள இணைய முகவரியில் காணலாம்.

அந்த நேரத்தில், அம்மாவின் உயிர் எல்லாம்வல்ல பரம்பொருளின் பாதங்களில் மீண்டும் பிறப்பில்லாத பேரின்பப் பெருவாழ்வு அடைய வேண்டுமென்று சிவபரம்பொருளை வேண்டி வழிபடுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.*

**நேரலை முகவரி:** https://www.oneroomstreaming.com/login
**நுழைவுச்சொல்:** sahara@saharafunerals.com.au
**கடவுச்சொல்:** 82PV6V

தகவல்
**குடும்பத்தினர்**
**இந்திரகுமார் (மகன்)**
+61421328385 / tikumar@bigpond.com

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசியல் கைதிகளுக்கு விடிவு

நம்மூர் அரசியலில் ஒரு பழக்கம் உண்டு. ஏதேனும் ஒரு விடயத்தில் முடிவு எடுப்பதைத் தாமதிக்க வேண்டும் என்றால் அந்த விடயம் குறித்து ஆராய்ந்து, பரிசீலித்துப் பரிந்துரைக்க ஓர் ஆணைக்குழுவை நியமித்து விடுவதுதான் அது.

ஆனால் இப்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்திருக்கும் ஆலோசனைச் சபையை அந்தக் கோணத்தில் பார்க்கத் தேவையில்லை.

பயங்கரவாத நடவடிக்கைகள் சம்பந்தகமாக சிறைத் தண்டனையை அனுபவிக்கும் மற்றும் தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் குறித்துக் கண்டறிதல், விடுதலை செய்தல், பிணை வழங்குதல் உள்ளிட்ட எதிர்காலத் தீர்மானங்கள் தொடர்பில் தமக்கு உரிய பரிந்துரைகளை வழங்கவே ஆலோசனைச் சபை ஒன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இப்போது நியமிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதம நீதியரசர் ஒருவர், முன்னாள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஒருவர், முன்னாள் சொலிஸிட்டர் ஜெனரல் ஒருவர் என மூவர், இந்த ஆலோசனைச் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் சுயாதீனச் செயற்பாடு தொடர்பில் சட்ட வட்டாரங்கள் திருப்தி தெரிவிக்கின்ற முறைமையின் அடிப்படையில் இந்த ஆலோசனைச் சபைக்கு இவர்கள் நியமிக்கப்பட்டமை ஆட்சேபனைக்குரியதல்ல என்று கூறலாம்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இத்தகைய ஆலோசனைச் சபை ஒன்றை ஜனாதிபதி நியமிப்பதற்கு இடம் உண்டு. ஆனால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்ட பல வருடங்களாகத் தமது வாழ்க்கையையே தொலைத்துவிட்டு அல்லாடும் அந்த ஜீவன்கள் குறித்து ஆட்சியாளர்கள் எவருக்குமே கரிசனை இல்லாத காரணத்தினால் இத்தகைய ஆலோசனைச் சபையை நியமிப்பதற்கான முயற்சிகளைக் கூட முன்னாள் ஜனாதிபதிகள் எடுக்கவேயில்லை.

தமிழர்களின் – சிறுபான்மையினரின் – வாக்குகளினால் அதிகாரத்துக்கு வந்து, நல்லாட்சி அரசை அமைத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் கூட அத்தகைய கரிசனை – ஈடுபாடு – இக்கைதிகள் தொடர்பில் இருக்கவில்லை என்பதுதான் உண்மை.

சரி. அப்படி என்றால், இப்போது இந்தக் கைதிகள் தொடர்பில் ஆராய்ந்து தமக்குப் பரிந்துரை தருவதற்கு இந்த ஜனாதிபதி – கோட்டாபய ராஜபக்ஷ – ஆலோசனைச் சபை ஒன்றை நியமித்திருக்கின்றமையால் இக்கைதிகள் தொடர்பில் அவருக்கு சிரத்தை – கரிசனை – உண்டு என்று கருதமுடியுமா என்ற கேள்வி எழுவது இயல்பானதுதான்.

'சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை' – என்பதுதான் உண்மை.

இந்தச் சமயத்தில், இப்படி ஓர் ஆலோசனைச் சபையை நியமித்தமைக்கு ஒரு வலிதான காரணம் உண்டு.

இந்த அரசின் தொடரும் மனித உரிமை மீறல்களாகப் பட்டியலிடப்படும் விடயங்களில் இந்த அரசியல் கைதிகளின் அர்த்தமற்ற – நீண்ட கால – தடுத்து வைப்பும் ஒன்றாகச் சுட்டப்படுவது தெரிந்ததுதான்.

இன்னும் மூன்று வாரங்களில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடர் ஆரம்பமாகின்றது. அங்கு இம்முறை இலங்கை விடயம் திரும்பவும் ஆராய்வுக்கு – கவனிப்புக்கு – உட்படப் போகின்றது. அச்சமயம் இந்த அரசியல் கைதிகளின் தொடர் தடுத்து வைப்பும் மனித உரிமை மீறலாகச் சுட்டப்படும்.

அந்தக் குற்றச்சாட்டை எதிர்கொள்வதற்கான தந்திரோபாய காய்நகர்த்தலாகவே இந்த ஆலோசனைச் சபை நியமனத்தை நோக்க வேண்டியிருக்கின்றது.

இந்த ஆலோசனைச் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் கொலிஸிட்டர் ஜெனரல் கம்லத், சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணியாற்றிய போது இந்தத் தமிழ் அரசியல் கைதிகளின் சட்ட விடயங்களைக் கையாண்டவர். இவ்விடயங்களில் நன்கு பரிச்சயமானவர்.

எனவே, ஜெனிவாவின் செப்ரெம்பர் கூட்டத்துக்கு முன்னர் இந்த ஆலோசனைச் சபை கூடி எடுக்கும் சில தீர்மானங்கள் கண்துடைப்பு நடவடிக்கையாக அரங்கேறவும் வாய்ப்புண்டு.

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில் யார் குற்றியாயினும் – எந்த வகையிலும் – விடயம் அரிசியானால் சரி. அந்தக் கைதிகள் தடுப்புக்காவலில் இருந்து சமூக வாழ்வுக்குத் திரும்புவதுதான் நம் ஒவ்வொருவரினதும் எதிர்பார்ப்பு, பிரார்த்தனை, விருப்பு எல்லாமே.

# சுதந்திரம், சமத்துவம், மனித உரிமைகளுக்காக குரல்கொடுத்த முக்கிய அரசியல் பிரமுகரே மங்கள

## தனக்கும் பாரிய இழப்பு என்கிறார் ரணில்



மங்கள சமரவீர இலங்கையில் ஒரு நம்பகமான மற்றும் நிலையான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். அனைவரினதும் சுதந்திரம் மற்றும் சமத்துவத்துக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் முன்னின்று செயற்பட்ட ஒரு முக்கிய அரசியல் பிரமுகராவார் என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவு தேசிய ரீதியிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தனிப்பட்ட ரீதியில் எனக்கும் பாரிய இழப்பாகும்.

கடந்த தினங்களில் அவருடன் தொலைபேசியில் உரையாடிய போது 'நீங்கள் விரைவாக குணமடைந்து திரும்புவீர்கள் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கின்றேன்' என்று கூறினேன். எனினும் அது நடக்கவில்லை. கொவிட் வைரஸ் அவரது உயிரையும் பறித்து விட்டது.

மங்கள சமரவீர இலங்கையில் ஒரு நம்பகமான மற்றும் நிலையான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். அனைவரினதும் சுதந்திரம் மற்றும் சமத்துவத்துக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் வாதிட்ட ஒரு முக்கிய அரசியல் பிரமுகராவார்.

அவர் கட்டமைப்புக்களுக்கு உட்படாமல் புதுமையான யோசனைகளைக் கொண்டு வந்தவர்.

மங்கள சமரவீர எம் அனைவர் மத்தியிலும் நல்லிணக்கத்தைத் தோற்றுவிப்பதற்காகப்பாடுபட்ட முன்னோடியாவார்.

2015 - 2019 காலப்பகுதியில் அமைச்சரவையில் வெளிநாட்டலுவல்கள் மற்றும் நிதி அமைச்சு பதவிகளை வகித்து முக்கிய சேவையை ஆற்றியுள்ளார். - என்றுள்ளது.

# கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சிறிதரன் எம்.பி. விஜயம் செய்து தேவையறிந்தார்!


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விஜயம் செய்தார்.

கொரோனாத் தொற்றின் பாதிப்பால் நாடு முழுவதிலுமுள்ள வைத்தியசாலைகள் பாரிய நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்கொண்டுள்ளன. கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்க போதிய மருத்துவ வசதிகள், இட நெருக்கடி, ஆளணி போதாமை போன்ற பல்வேறு சவால்களுக்கு சுகாதாரத் துறை முகம்கொடுக்கின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மிகப் பெரிய வைத்தியசாலையாகிய கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டு, வைத்தியசாலையின் தேவைகள் தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார்.



# துருக்கி ஆயுத கண்காட்சியில் பங்கேற்ற பாதுகாப்பு செயலர்



கொரோனாத் தொற்றுநோய் அச்சுறுத்தல் காரணமாக இலங்கை முடக்கப்பட்டுள்ள போதிலும், பாதுகாப்பு செயலாளர் உட்பட ஶ்ரீலங்கா இராணுவ அதிகாரிகள் குழு, துருக்கியில் இடம்பெறும் ஆயுத விற்பனைக்கான கண்காட்சியில் பங்கேற்றுள்ளது.

இஸ்டான்புல்லில் இடம்பெறும் நான்கு நாள் சர்வதேசப் பாதுகாப்பு தொழிற்துறை கண்காட்சியில் கலந்து கொண்டுள்ள பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன, அந்நாட்டின் தேசியப் பாதுகாப்பு அமைச்சர் ஹுலுசி அகாரையும் சந்தித்துள்ளார்.

சர்வதேசப் பாதுகாப்பு தொழில்முறைக் கண் காட்சி - 2021இன் ஓர் அங்கமாக இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடல் இரு நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு உறவுகளை மேலும் பலப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது.

சர்வதேசப் பாதுகாப்பு தொழில்முறைக் கண்காட்சி - 2021இல், ஆயுதங்கள், தரைப்படை வாகனங்கள், இராணுவ இலத்திரனியல் சாதனங்கள், கடற்படை ஆயுத தளவாடங்கள், விமான முறை, தளவாட வாகனங்கள், விநியோக உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் உள்ளிட்ட பாதுகாப்பு துறை சார் தயாரிப்புகள் காட்சிப்படுத்தப்பட்டன.

இதன்போது ஶ்ரீலங்கா அரசாங்கம் ஆயுதங்கள் எதனையும் கொள்வனவு செய்ததா என்பது குறித்த தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இந்தக் கலந்துரையாடலில் துருக்கிக்கான இலங்கைத் தூதுவர் எம். ஆர். ஹஸன், இலங்கை பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரி பிரிகேடியர் தினேஷ் நானயக்கார மற்றும் பாதுகாப்புச் செயலாளரின் இராணுவ உதவியாளர் கேர்ணல் கே. டபிள்யூ. ஜெயவீர ஆகியோரும் கலந்து கொண்டனர்.

துருக்கி குடியரசின் ஜனாதிபதியின் அனுசரணையுடன் அந்நாட்டு தேசியப் பாதுகாப்பு அமைச்சால் நடத்தப்பட்ட இந்தக் கண்காட்சி - 2021 நிகழ்வு ஒகஸ்ட் 17 முதல் 20 வரை, துருக்கிய ஆயுதப்படைகள் குழுமத்தின் ஏற்பாட்டுடனும் முகாமைத்துவத்துடனும் தூயாப் வர்த்தக மற்றும் ஒன்றுகூடல் மாநாட்டு மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

கடல், விமான மற்றும் நில பாதுகாப்பில் செயற்படும் சுமார் ஆயிரம் சர்வதேச நிறுவனங்கள் வர்த்தக கண்காட்சியில் பங்கேற்றன என துருக்கி பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

அங்கம் -56

ந.வித்தியாதரன்

எண்பதுகளின் நடுப்பகுதியில் நடந்தது இது. 1983 ஆடி கலவரத்தை அடுத்து 'தினபதி', 'சிந்தாமணி' பத்திரிகைகளை விட்டு வெளியேறி, யாழ்ப்பாணத்துக்கு வந்து மீண்டும் பந்தடித்துத் திரிந்த காலம் அது. யாழ்ப்பாணத்தில் புதிய பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்கும் திட்டம் முகிழ்ந்திருந்தது. அச்சமயத்தில் எனது தம்பியார் ஒருவருடைய விடயமாக நான் தமிழகம் செல்ல வேண்டி இருந்தது. அப்போது ஈழத்தமிழர் போராட்ட இயக்கங்கள் தமிழகத்தில் காலூன்றிப் பரபரப்பாக செயற்பட்டுக் கொண்டிருந்தன. அனைத்து இயக்கங்களுக்கும் சென்னையில் அலுவலகங்கள் இருந்தன.


தமிழகம் செல்வதற்கான விசா பெறும் நோக்குடன் கொழும்புக்கு வந்த நான் ஆசிரியர் சிவநாயகம் ஐயாவைப் போய்ப் பார்த்தேன். ஓரிரு தடவைகள் தினபதி அலுவலகத்திலும், பின்னர் பம்பலப்பிட்டி தொடர்மாடியிலுள்ள அவரது வீட்டிலும் சந்தித்தேன்.

புதிய பத்திரிகை தொடங்குவது பற்றிய திட்டங்கள் தொடர்பில் அவரின் ஆலோசனைகளைப் பெறுவது என் நோக்கமாக இருந்தது. அந்த விடயத்தை மிகச்சிரத்தையோடு உள்வாங்கி ஆலோசனைகள் தந்தார் சிவநாயகம் ஐயா.

*"தினபதி, சிந்தாமணி, வீரகேசரி போன்றவற்றில் வரைந்த ஓவியர் வீகே (வீ. கனகலிங்கம்) யாழ்ப்பாணத்தில் இருக்கின்றார். நான் கூறியதாக கூறுங்கள். அனைத்துப் படங்களும் ஓவியங்களும் வரைந்து தருவார். மனம் வைத்தால் உச்சமாகச் செய்வார். அவரின் மனதை வெல்வீர்களானால் அற்புதமான படங்களைத் தருவார்"* என்றார் சிவநாயகம் ஐயா. அவர் கூறியவை முற்றிலும் உண்மை.

வீகே என்ற அந்த மாபெரும் ஓவியர் – ஓவியக் கலைஞர் – ஒரு Slow Coach தான். ஆனால் மனம் வைத்தாரானால் அற்புதமான திறமையை வெளிப்படுத்துவார். 'உதயன்', 'சஞ்சீவி' பத்திரிகைகள் இன்று வரைப் பயன்படுத்தும் Master Head Line, இலச்சினை எல்லாம் முப்பத்தியாறு ஆண்டுகளுக்கு முன்னர் அவர் வரைந்தவையே.

ஓவியப் பணியில் ஓய்வு பெற்று, கொக்குவிலில்




தன் வீட்டில் 'அக்கடா' என்று அமைதியாக இருந்தவரை நாங்கள் போய் மடக்கிக் கொண்டோம். அவர் வீட்டில் இரண்டு, மூன்று ஆடுகள் வளர்த்தார். அவருடைய முழுநேர ஈடுபாடும் தமது வெற்றிலை பாக்கும், தமது ஆடுகள் பற்றிய நினைவுமாகவே இருந்தன. ஓவியம் வரைய வேண்டிய நேரத்தில் ஆட்டுக்குக் குழை பிடுங்கச் சத்தகத்தோடு புறப்பட்டு விடுவார். அல்லது ஆட்டுக் கொட்டில் துப்புரவு செய்து கொண்டிருப்பார். அல்லது ஆட்டுக்குத் தவிடு வைத்துக் கொண்டிருப்பார்.

இப்போது இருப்பது போன்ற கணினி வசதி ஏதும் இல்லாத காலம் அது. செய்தித் தலைப்புகள், பொதுத் தலைப்புகள் எல்லாம் ஓவியமாக வரைந்து எடுக்கப்பட வேண்டும். அந்த விடயத்தில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஓவியர் வீகே எங்கள் கைகளில். ஆனால் அவரோ ஆடுகள் பராமரிப்பில் மும்முரம். என்ன செய்வது? நேரத்துக்கு வேலைகளை முடிக்க முடியவில்லை என்று ஆசிரியர் கானமயிலநாதன் குழம்பிக் கொண்டிருந்தார். ஆசிரியரே நேரில் போயும் விடயம் நேரத்துக்கு ஒப்பேறுவதாக இல்லை. பின்னாளில் 'சஞ்சீவி' ஆசிரியராக இருந்த எனது மைத்துனர் வரதசுந்தரமும் தமது சங்குவேலி இல்லத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரும் போது அடிக்கடி ஓவியர் வீட்டுக்குச் சென்று வருவார்.

கடைசியாக ஆசிரியர் பீடத்திலிருந்த எல்லோரும்




'ஓவிய மாமணி' வீ.கே. எனப்படும் வீ.கனகலிங்கத்தின் பொன்விழா 1990இல் கொழும்பில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். வீரகேசரி ஆசிரியர் சிவநேசச்செல்வன் பேசிக் கொண்டிருக்கின்றார். பின்னால் மேடையில் தினபதி, சிந்தாமணி ஆசிரியர் எஸ்.டி.சிவநாயகம், தொழிலதிபர் எஸ்.பி.சாமி (பின்னாளில் 'தினக்குரல்' நாளிதழை ஸ்தாபித்தவர்), தினகரன் ஆசிரியர் சிவகுருநாதன் ஆகியோர்.

சேர்ந்து பொறுப்பை என்னிடம் தள்ளினர். ஓவியர் வீகே மூலமான காரியங்களை ஒப்பேற்றும் பணியை நான் முடிக்க வேண்டும் என்று பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

இப்போது போல கைத்தொலைபேசி வசதி அப்போது இல்லை. நிலையான தொலைபேசியிலும் ஓவியர் வீகேயைப் பிடிக்க முடிவதில்லை. மனைவி அல்லது மகள்தான் பேசுவர். "அப்பா வெளியில்" எனப் பதில் வரும். ஆட்டுக்குக் குழை உடைக்கும் துளவாரம்தான். நானும் அலுவலகத்தின் மோட்டார் சைக்கிளில் தினசரி கொக்குவில் விசிட் அடித்துச் சலித்துவிட்டேன். என் எதிர்கால மனைவியின் (அது நம் காதல் காலம்) வீடும் கொக்குவிலில் ஓவியர் வீட்டுக்கு சற்று தொலைவில்தான். அதனால் கொக்குவில் விசிட் கொஞ்சம் மனநிறைவைத் தந்ததும் உண்மைதான். அதெல்லாம் அந்தக் காலப் பசுமையான நினைவுகள்.

இதற்கிடையில் ஓவியர் வீகே இடம் வேலை வாங்கும் தந்திரோபாயத்தை நான் ஒருவாறு கண்டறிந்தேன். இரண்டு விடயங்கள் அவர் மனதைத் தொட்டன என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

ஒன்று – ஆசிரியர் சிவநாயகத்தின் பெயர். *"அந்த ஆள் பெரிய மனுஷனப்பா…!"* – என்று புகழுவார். அது அவரின் அடி மனதில் இருந்து வரும்.

அடுத்தது – அவரது ஆடுகளும் குட்டிகளும். பேச்சுக்கு ஒரு தடவை தமது ஆடுகள் பற்றிய புராணம் பாடாவிட்டால் அவர் திருப்திப் படமாட்டார்.

இந்த இரண்டையும் வைத்துக்கொண்டே காரியத்தை நகர்த்தினேன். எந்தப் படம் பற்றியும் அவரோடு ஆலோசனை செய்ய முற்பட்டாலும் ஆசிரியர் சிவநாயகம் ஐயாவின் பெயரை நான் வலிந்து எடுத்து விடுவேன்.

*"ஆசிரியர் எஸ்.டி.எஸ். ஐயாவுடன் நேற்றிரவு பேசினேன். 'தைப்பொங்கல் படமா? ஓவியர் வீகேயிடம் நான் சொன்னேன் என்று சொல்லுங்கள். முப்பது, நாற்பது வருடமாகப் பொங்கல் படம் கீறுகிறார். எல்லாப் படத்திலும் பொங்கல் பானையில் இருந்து பொங்கி வழியும் பால் வரை, அகப்பை பிடித்திருக்கும் இளம்பெண் வரை, ஒரே சாயலில் அச்சொட்டாக இருக்கின்றன. உதயனுக்காகக் கொஞ்சம் வித்தியாசமாக – வீரகேசரி, தினபதி, சிந்தாமணிக்கு வேறுபட்டதாக – கீறும்படி நான் சொன்னதாகச் சொல்லுங்கள்' என்று ஐயா கூறினார். ஓவியரே, உங்கள் படங்கள் அப்படி என்ன ஒரே மாதிரியாகவா காலம் முழுவதும் இருக்கின்றன?"* – என்று நான் கதை விடுவேன்.

*"அப்பனே.. அப்பனே… அப்படியா சொன்னார் பெரியவர்? அது அந்தக் காலம் தொடக்கம் அவர் எனக்குச் சொல்றதுதான். இந்த முறை பாரும் எப்படி மாற்றிக் காட்டுகிறேன்"* – என்று கூறுவார் ஓவியர். அதே வேகத்தில் புதிய கலைப்படைப்பு அடுத்த நாள் காலையில் தயாராக இருக்கும்.

*"ஆட்டுக்குக் குழை ஒடிக்க நீங்கள் ஏன் ஐயா ஒழுங்கை, ஒழுங்கையா அலைகிறீர்கள்… நானே சப்ளை செய்கிறேன்"* என்றேன் ஒருநாள் நான்.

அலுவலகப் பியோன்களைப் பிடித்து அயலில் குழைகளை ஒடித்து மோட்டார் சைக்கிளில் கட்டிக் கொண்டு அவர் வீட்டுக்குப் போவேன்.

குழையோடு வரும் மோட்டார் சைக்கிளைக் கண்டால் சொக்லேட்டுடன் வரும் தந்தையாரைப் பார்த்து மகிழ்ந்து புளகாங்கிதம் அடையும் குழந்தை போல மகிழ்வார் ஓவியர் வீகே.

*"தம்பி வித்தி குழையோட வருவான்… அவன் போகும் போது கையில ஓவியம் கொடுத்து விட வேண்டும் என்று இரவிரவாக முழித்து இருந்து வரஞ்சவர் தம்பி"* என்று ஓவியரின் மனைவி கூறுவார். அற்புதமான ஒரு கலைஞரை குழை சப்ளை பண்ணியே காரியமாற்ற முடிந்தது என்றால் அதற்கு ஒரே காரணம்தான். அது, ஆசிரியர் சிவநாயகத்தின் ஊடக வாரிசுகள் நாங்கள் என்ற காரணத்தினால் எங்கள் மீது ஓவியர் வீகே வைத்திருந்த வாஞ்சைதான்.

ஓவியர் வீகேயின் பொன்விழா மலரில் இருந்து ஒரு தகவல் இந்த இடத்தில் குறிப்பிடப்பட வேண்டும் என்று நினைக்கிறேன். அது – 'இன்று நல்லூரில் நிறுவப்பட்டிருக்கும் (இப்போது நாவலர் கலாசார மண்டபத்தில் இருக்கும்) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சிலைக்கான மூலப் படத்தை தினபதி, சிந்தாமணி பத்திரிகை தான் முதன் முதலில் வெளியிட்டன. அதனை வரைந்தவர் ஓவியர் வீகே.'

இந்தியாவுக்கு செல்வதற்காகக் கொழும்புக்குப் போய் இருந்த நான் யாழ்ப்பாணத்தில் புதிய பத்திரிகை ஆரம்பிப்பது குறித்து சிவநாயகம் ஐயாவுக்கு சொன்ன போது அதை ஆழமாகச் செவிமடுத்தார் அவர். அடுத்த நாள் வந்து சந்திக்கும்படி என்னிடம் கூறினார்.

அடுத்த நாள் நான் தினபதி அலுவலகத்துக்குப் போன போது அவர் முக்கிய ஆலோசனை ஒன்றை எனக்குத் தந்தார்.

பிற்காலத்தில் யுத்தத்திற்கு மத்தியில் நீண்ட காலம் உதயன் தனித்து நிற்பதற்கான அத்திபாரத்துக்குரிய ஒரு மிகப்பெரும் ஆலோசனை அது என்பது அப்போது எனக்குத் தெரிந்திருக்கவில்லை. அரைகுறை மனதுடன் தான் அந்த ஆலோசனையை உள்வாங்கிக் கொண்டேன்.

ஆனால் அதுதான் என்னை ஊடகத்துறை வாழ்வில் துணிச்சலான பத்திரிகையாளன் என்ற உயரத்தில் பிற்காலத்தில் தூக்கி வைத்தது.

அந்த ஆலோசனை என்ன? அதற்குள் நுட்பமாகப் பொதிந்து கிடந்த வழிகாட்டல் யாது? நாளை பார்ப்போமா வாசகர்களே!

(வளரும்…)

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 07 | கணிதம் | அலகு 15

### நீளம்

நீளத்தை அளக்கும் அலகுகள்
1) மில்லிமீற்றர் (mm)
2) சென்ரி மீற்றர் (cm)
3) கிலோ மீற்றர் (km)

நீளத்தை அளக்கும் அலகுகளுக்கு இடையிலான தொடர்பு
1 cm = 10mm
1m = 100cm
1km = 1000m

(01) கீறிட்ட இடங்களை நிரப்புக.
உ+ம் - 1) 26mm = 20mm + 6 mm
= 2cm + 6mm
= 2.6cm

2) 656cm = 600cm + 56cm
= 6m + 56cm
= 6.56m

3) 325cm = ----------m
4) 7075m = ----------km
5) 5.3cm = ----------mm
6) 150cm = ---------m
7) 2.560km = ---------m

(02) நீளம் தொடர்பான அளவீடுகளைக் கூட்டல்.
உ+ம் - 1) 5cm 8mm + 6cm 7mm
= 12cm 5mm

| | cm | mm |
|---|---|---|
| + | 5 | 8 |
| | 6 | 7 |
| | 12 | 5 |

2) 3m 75cm + 2m 60cm
= 6m 35cm

| | m | cm |
|---|---|---|
| + | 3 | 75 |
| | 2 | 60 |
| | 6 | 35 |

3)3km 250m + 2km 900m
= 6km 150m

| | km | m |
|---|---|---|
| + | 3 | 250 |
| | 2 | 900 |
| | 6 | 150 |

4) 8m 53cm + 4m 2cm = ----------------------
5) 12m 70cm + 15m 80cm = ----------------------
6) 4km 20m + 950m = ----------------------
7) 86cm + 1m 24cm = ----------------------
8) 25cm 6mm + 8cm 9mm = ------------------------

(03) நீளம் தொடர்பான அளவீடுகளைக் கழித்தல்.
உ+ம் - 1) 12cm 8mm - 8cm 4mm
= 4cm 4mm

| | cm | mm |
|---|---|---|
| - | 12 | 8 |
| | 8 | 4 |
| | 4 | 4 |

2) 2m 9cm - 1m 23cm
= 86cm

| | m | mm |
|---|---|---|
| - | 2 | 09 |
| | 1 | 23 |
| | 0 | 86 |

3) 3km 70m - 2km 90m
= 980m

| | km | m |
|---|---|---|
| - | 3 | 70 |
| | 2 | 90 |
| | 0 | 980 |

4) 7m 75cm - 4m 2cm = ------------------------
5) 5m 50cm - 1m 80cm = ------------------------
6) 6km 50m - 2km 700m = ------------------------
7) 32cm 3mm - 7cm 5mm = ------------------------
8) 12km 940m - 4km 50m = -------------------------

(04) நீளம் தொடர்பான அளவீடுகளைப் பெருக்கல்.
உ+ம் - 1) 1m 80cm x 8
= 14m 40cm

| | m | cm |
|---|---|---|
| | 1 | 80 |
| x | | 8 |
| | 14 | 40 |

2) 2cm 8mm x 6
= 16cm 8mm

| | cm | mm |
|---|---|---|
| | 2 | 8 |
| x | | 6 |
| | 16 | 8 |

3) 8km 120m x 8
= 64km 960m

| | km | m |
|---|---|---|
| | 8 | 120 |
| x | | 8 |
| | 64 | 960 |

4) 20m 80cm x 4 = --------------------------------
5) 1m 36cm x 9 = --------------------------------
6) 18cm 3mm x 6 = --------------------------------
7) 29km 300m x 4 = --------------------------------
8) 6cm 4mm x 8 = --------------------------------

(05) நீளம் தொடர்பான அளவீடுகளை முழு எண் ஒன்றினால் வகுத்தல்.
உ+ம் - 1) 8m 64cm ÷ 2
8m 640cm = 864cm
864cm ÷ 2 = 432cm
= 4m 32cm

2) 8km 440m ÷ 5
8km 440m = -------------m
-----m ÷ 5 = -------------m
= ------- km -----m

3) 65cm 7mm ÷ 9
65cm 7mm = -------------mm
-----m ÷ 9 = -------------mm
= ------- cm -----mm

ஆக்கம் : திரு. பா.லாவண்யா
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி
வழிகாட்டலும் ஆலோசனையும் : திருமதி கம்சானந்தி முகுந்தன்
விரிவுரையாளர்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி


## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 06 | கணிதம் | அலகு 15

### நீளம்

(01)
i) O
ii) AO
DO
BO
CO
iii) AD

(02) i)




iv) விட்டம்

v) 8cm

ஆக்கம் : திரு. பா.லாவண்யா
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி
வழிகாட்டலும் ஆலோசனையும் : திருமதி கம்சானந்தி முகுந்தன்
விரிவுரையாளர்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி

# அரசியல் வரலாற்றில் தவிர்க்க முடியாத நேர்மையான மனிதர் மங்கள சமரவீர

## பழனி திகாம்பரம் கூறுகின்றார்

இலங்கை அரசியல் வரலாற்றில் தவிர்க்க முடியாத ஆளுமையாக திகழ்ந்த மிகவும் நேர்மையான மனிதர் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவு தொடர்பாக வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் மலையக மக்களின் அபிவிருத்தித் திட்டங்களில் நிதி அமைச்சராக இருந்து முக்கிய பங்காற்றியவர் நண்பர் மங்கள சமரவீர ஆவார்.

குறிப்பாக மலைநாட்டு புதிய கிராமங்கள் அமைச்சுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை தாமதமின்றி வழங்குவதில் பெரும் பங்கு வகித்தார்.

மலைநாட்டு அபிவிருத்தி அதிகார சபை உருவாக்கப்பட்ட விடயத்திலும்



மங்கள சமரவீர ஒத்துழைப்புடன் செயற்பட்டார்.

மாத்தறை மாவட்ட மலையக மக்கள் தொடர்பாகவும் நாட்டில் வாழும் சிறுபான்மை மக்கள் பற்றியும் மிகவும் கரிசனையுடன் செயற்பட்டவர்.

இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும். முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவிற்கு எனது ஆழ்ந்த அஞ்சலிகளைச் செலுத்துவதுடன் அவரது குடும்பத்தார் மற்றும் ஆதரவாளர்களுக்கு அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். - என்று குறிப்பிட்டுள்ளார்.

# தொடரும் திருகுதாளம்

## பெயர் சுருட்டும் தில்லாலங்கடி முதல்வர்

இ.ஆனல்ட்
(முன்னாள் மாநகர முதல்வரும் தற்போதைய யாழ். மாநகர சபை உறுப்பினரும்)

யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணனின் திருகுதாளம் தொடர்வதாகவே உள்ளது. ஏனெனில் தமது நடவடிக்கைகள் தொடர்பான உண்மைகள் வெளிவரத் தொடங்க எதனைக் கூறுவது எனத் தெரியாது அவசரப்பட்டு உண்மையற்றவைகளை அவிழ்த்து விடுவதில் அவர் முனைப்பாக உள்ளார் எனத் தெரிகின்றது.

உதாரணமாக அவர் 2021-08-24ஆம் திகதி தமது அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தான் நேர்மையானவர் எனத் தெரிவிக்க முற்பட்டு, அதற்காகக் கூறிய விடயங்களை ஆராய்ந்தால் அவை தில்லாலங்கடிக் கூற்றுகளே என்பது அம்பலமாகும்.

அதன்போது "நான் வந்து 17 வீதிகளை இப்போது அவசர அவசரமாக அபிவிருத்தி செய்து கொண்டு இருக்கிறேன். ஐ திட்டத்திற்கு கீழ் நான் கொண்டு வந்து விட்டுள்ளேன். இதனை மாகாசெய்கின்றது." - எனமுதல்வர் கூறினார்.

ஐ றோட் திட்டமானது 2016ஆம் ஆண்டு ஆனி மாதம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் சூரியராச்சிக்கும் வடக்கு மாகாண பிரதம செயலாளராக அப்போது பணியாற்றிய அ.பத்திநாதனிற்கும் இடையில் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கில் மேற்கொள்ளப்படும் 343 வீதிகளிலேயே இந்த 17 வீதிகளும் உள் அடங்குவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை எழுத்தில் வழங்கியுள்ளது. (பிரதி இணைக்கப்பட்டுள்ளது).


இதன் பின்பு வீதி அபிவிருத்தி அதிகார சபை கூறுவிலை கோரியபோது ஒப்பந்தகாரர் பதிவுப் புத்தக தரம் எம்.01 கோரப்பட்டது. இதற்கு இந்த தரத்தில் வடக்கில் உள்ள இரு நிறுவனங்களும் விண்ணப்பிக்காத போதும் தெற்கில் பலர் விண்ணப்பிக்க மாகா தகுதி பெற்று தேர்வாகியது. அனைத்து விதிமுறைகளும் பின்பற்றி 2020ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமே ஒப்பந்தம் கையளிக்கப்பட்டுப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. இதற்கு ஆதாரமாக தற்போது ஐ றோட்டில் புனரமைக்கப்படும் வீதிகள் அனைத்திலும் வீதி அபிவிருத்தி அதிகார சபை நாட்டும் அறிவித்தல் பலகைகளில் இருந்தே உண்மை நிரூபணம் செய்யப்படுகின்றது. அதிலே ஆரம்பதிகதி 01-02-2020 என வீதி அபிவிருத்தி அதிகார சபை எழுத்தில் போட்டுள்ளது. இந்த திட்டம் 2016ஆம் ஆண்டு ஏற்படுத்தும்போது இந்த முதல்வர் வீதி, வீதியாக எதனை கூறித் திரிந்தார் என நாம் கூறவேண்டியது கிடையாது. நல்ல வேளை வடக்கு மாகாணம் முழுக்க நான் தான் இதனைக் கொண்டு வந்தேன் என அவர் கூறாமல் விட்டுவிட்டார் எனச் சந்தோசப்படுவோம்.

இப்படி எல்லாம் பணிகளையும் சபை முன்னெடுக்கும்போது சபை வளாகத்திற்குள் வரவே முடியாமல் இருந்த ஒருவர் சொல்லுகின்றார் தான் கொண்டுவந்த திட்டம் என. இதனைவிட இவர் ஒரு பொய்யர் என நிரூபிக்க வேறு என்ன ஆதாரம் வேண்டும்?


இரண்டாவது விடயம், மாநகர சபைக்குள் இருக்கும் சகல குளமும் 40 அல்லது 50 வருடங்களாகத் தூர் வாரி புனரமைப்புச் செய்யாத குளங்களை தற்போது தாம்தான் புனரமைப்பு செய்கிறார் என தற்போதைய மாநகர முதல்வர் கூறுகின்றார். இது அடுத்த மிகப் பெரும் பொய்.

ஏனெனில் 2004ஆம் ஆண்டு சமாதான காலத்தில் நோர்வே நாட்டிடம் வைக்கப்பட்ட கோரிக்கையின் பெயரில் நோர்வே அரசின் நிதியில் மாநகர சபையின் ஆளுகையின் கீழ் இருந்த அனைத்துக் குளங்களும் புனரமைப்புச் செய்யப்பட்டன. அந்த திட்டம் 2005 மற்றும் 2006ஆம் ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்டது. இதற்கு மாவட்டச் செயலகம் மட்டுமல்ல, நோர்வே தூதரகமும் கூட சாட்சியாக இருக்கும். இவ்வாறுதான் தற்பெருமைக்காக பொய்களை அடித்து விடுபவர் தொடர்பில் அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. இதன்போது பிறவுண் வீதியில் உள்ள இடி குண்டு அதிக மண் அகழ்ந்தமையினால் இன்றுவரை ஒரு துளி நீர் சேகரிக்க முடியாமல்போன வரலாறும் உண்டு.

நகர மண்டபம் மத்திய அரசினால் செய்யப்படுகின்றது. அதனையும் தென்னிலங்கை நிறுவனம்செய்வதனால் அவர்களையும் கலைத்து விடுவோமா என்கின்ற பாணியில் அதே முதல்வரே கேட்டார். முன்னாள் முதல்வரின் நிர்வாகத்தில் எதனைச் செய்தனர் எனக் குறிப்பிட்டு இவரே பதிலையும் எடுத்து கொடுத்துவிட்டார். இந்த நகர மண்டபம் முன்னாள் முதல்வரான என்னாலும் எமது கட்சியினதும் முயற்சியில் முன்னெடுக்கப்பட்டது எனக் கூறலாம். ஏனெனில் இதன் ஆரம்ப விழாவின்போது "இது ஓர் படம் காட்டும் நிகழ்வே அன்றி இந்தக் கட்டடம் வராது" என தற்போதைய முதல்வரின் கட்சியும், முதல்வரை ஆதரித்த கட்சியும் கூறியமை மட்டுமன்றி அந்தக் கட்டுமான ஆரம்ப நிகழ்வைப் புறக்கணித்திருந்த வரலாறும் உண்டு. இது மட்டுமல்லாது, இந்த ஆரம்ப விழாவின் வரவேற்பிற்கு வழங்கும் சிற்றுண்டிக்கே கூறுவிலை எடுக்க வேண்டும், அநாவசிய செலவு என விமர்சித்தபோது இந்தக் கட்டடம் அமைந்தே தீரும், அவ்வாறு வரா விட்டால் ஆரம்ப விழா செலவை சொந்தப் பணத்தில் செலுத்துவோம் என உறுப்பினர்களான ந.லோகதயாளனும் நியாஸ்ும் கூறிய பதிவும் உண்டு. அதன் பின்பே அதற்கான கொடுப்பனவு அனுமதிக்கப்பட்டது.



தற்போது இடம்பெறும் வீதி புனரமைப்பின்போது 2020.02.01 திட்டம் ஆரம்பமானதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை நாட்டியுள்ள அறிவித்தல் பலகை.


வீதிஅபிவிருத்திதிணைக்களம்,வடமாகாண சபை
Road Development Department, Northern Provincial Council

எனது இல. My No. NP/18/RTI/2020/02 உமது இல. Your No. திகதி Date 2020.02.20

2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 24(3) இன் கோரிக்கை-

மேற்படி விடயம் தொடர்பாக தங்களால் பிரதம செயலாளர், வடக்கு மாகாணம் அவர்களுக்கு மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட கடிதம் தொடர்பாக,
தங்களால் கோரப்பட்ட கேள்வி வடிவிலான தகவல் கோரிக்கைகளுக்கு இலக்க ஒழுங்கில் பதில்கள் வழங்கப்படுகிறது.

01. வடக்கு மாகாணத்தில் iRoad திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 2016 ஆனி மாதம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.


02. Mr.Sooriyarachchi [Chairman, Road Development Authority] மற்றும் A.Pathinathan [Chief Secretary, Northern Provincial Council] ஆகியோர் ஒப்பமிட்டனர்.

03. ஒப்பந்தத்தின் போது 595 வீதிகள் உள்வாங்கப்பட்டன. வீதிகள் தொடர்பான விபரத்தை பெறுவதற்கு 30 ரூபா பணத்தினை காசாக, வங்கி உண்டியலாக அல்லது கொடுப்பனவுக் கட்டளையாக அல்லது தபால் கட்டளையாக அல்லது தபால் முத்திரையாக எமது அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

04. தற்போது iRoad திட்டத்தில் 343 வீதிகள் புனரமைக்கப்பட உள்ளன.

05. அவ்வாறு புனரமைக்கப்படவுள்ள வீதிகள் தொடர்பான விபரத்திற்கு 34 ரூபா பணத்தினை காசாக, வங்கி உண்டியலாக அல்லது கொடுப்பனவுக் கட்டளையாக அல்லது தபால் கட்டளையாக அல்லது தபால் முத்திரையாக எமது அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

இல.657/1 A,கடற்கரைவீதி,யாழ்ப்பாணம். No.657/1 A, Beach Road, Jaffna.
Telephone :021 2220958,021 221 7010; Fax : 021 2220789; E-mail : nproad@gmail.com


எந்திரி.சி.பு.சிவநேசன்,
மாகாணப் பணிப்பாளர்,
வீதி அபிவிருத்தித் திணைக்களம்,
வடமாகாணம்.
தொடர்பு கொள்ளுவதற்கான விபரங்கள் : 021 222 7010

தங்கள் உண்மையுள்ள,

தகவல் அலுவலர்
க.அன்ரியோ சாம்சன்
(பொறியியலாளர்)

பிரதி: தகவல் அலுவலர், பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாணம்.

ஐ றோட் திட்டம் தொடர்பில் 2020ஆம் ஆண்டு வீதி அபிவிருத்தி அதிகார சபை வழங்கிய கடிதம்.

இவை அனைத்திற்கும் மேலாக நகர மண்டபம் அமைக்க முதலில் பெறுமதி கணித்தபோது ஆயிரத்து 800 மில்லியன் ரூபா தேவை எனக் கணிப்பிட்ட சமயம், அதில் ஆயிரம் மில்லியன் ரூபா மத்திய அரசின் பங்களிப்பிலும், 500 மில்லியன் ரூபா மாகாண சபையின் பங்களிப்பிலும், 300 மில்லியன் ரூபா மாநகர சபையின் பங்களிப்பிலேயே மேற்கொள்வதாக இணக்கம் காணப்பட்டதோடு மாநகர சபையினால் இதற்காக 300 மில்லியன் ரூபா வங்கியில் வைப்புச் செய்து ஒதுக்கப்பட்டது.

இதன் பின்பு அப்போதை அரசுடன் கூட்டமைப்பிற்கு இருந்த நெருக்கம் காரணமாக எமது கட்சியான கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஊடாக நான் அப்போதைய பிரதமரான ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஆகியோரை நாடாளுமன்ற உறுப்பினர் சகிதம் நேரில் சந்தித்து நகர மண்டபத்திற்கான முழுப் பணத்தையும் மத்திய அரசே வழங்க இணங்க வைத்த பின்பே பணி ஆரம்பமானது. இதனால் மாநகர சபை ஒதுக்கிய 300 மில்லியன் ரூபா பணமும் மாநகர சபைக்கு எமது ஆட்சியினால் மீதப்படுத்தப்பட்டது.

இந்த வரலாறுகளை தெரியாத அல்லது கூற விரும்பாத தற்போதைய முதல்வர் வாயில் வந்த வற்றையெல்லாம் அடுக்கக் கூடாது என்பதைக் கூறிவைக்க விரும்புகிறேன்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 111



**319. வண. பிதா ஜேம்ஸ் பத்திநாதனின் மகஜரை மஹிந்தவின் அரசாங்கம் எப்படிப் பார்த்தது? நிலைமையை உணர்ந்து தன்நாட்டு மக்களுக்கு கடமைகள் உண்டு என நினைத்ததா?**

இங்கு அரசியல் அடிப்படையில் "அவர்கள்" பொறுப்பு, "எங்கள்" பொறுப்பு என்று பிரித்துப் பார்க்கப்பட்டது.

எங்களுக்கு கூறப்பட்ட முறையில், வெளியேறி முகாம்களில் உள்ள மக்களை அரசாங்கம் கவனிக்கிறது. அதேபோல், அங்கிருக்கும் (புலிகள் பக்கத்தில் இருக்கும்) மக்களும் வெளியேறி, பயங்கரவாதிகளை நாம் அணுகுவதற்கு உதவினால், அவர்களுக்கும் பராமரிப்பு தரப்படும். ஆனால் அவர்கள் அரசாங்கத்தை நம்பாமல், அல்லது அரசாங்கத்தைப் பற்றி அக்கறை கொள்ளாமல், "அவர்களிடம்" (புலிகளிடம்) அடைக்கலம் புகுந்தால் அது "அவர்கள்" பொறுப்பு. பயங்கரவாதிகளுக்கு நான் பராமரிப்பு கொடுக்கத் தேவையில்லை என்ற வாதத்தையே மஹிந்தா முன்னெடுத்துக் கொண்டிருந்தார். அதைத்தவிர பஸில், மற்ற அரசாங்க அங்கத்தினர் ஒவ்வொருவிதமான கணக்குகள் காட்டினார்கள்.

பழைய இருப்பிடங்களில் இருந்து, குடிபெயர்ந்த மக்களின் தொகைகளை அந்தக் கிராமங்களின் அரசாங்க உத்தியோகத்தர்கள் கணக்கெடுத்து அனுப்பியதை கூட்டிக் கழித்துப் பார்த்தால் அவ்வளவு தொகை வராது என்பது ஒரு கணக்கு.

இவற்றை ஆதாரமாக வைத்து கலாநிதி ராஜீவ விஜயசிங்கா அரசாங்கத்தின் சார்பில் எழுதிய மறுப்புரையில், இது சர்வதேசத்தைப் பிழையான வழிமுறையில் நடந்த ஏற்படுத்தப்பட்ட தந்திரம் எனவும்அந்தமகஜரில்பலஉண்மைக்குப்புறம்பான தகவல்களும் உணர்ச்சியைத் தூண்டக்கூடிய வாதங்களும் புனையப்பட்டுள்ளன என்று விவாதித்தார். அடுத்து UNHCR உடன், அவர்களையும் சேர்த்து, அமைச்சுக்கள் நடத்திய சந்திப்பின் படி ஜூலை வரை 17,000 பேர் கிளிநொச்சி மாவட்டத்திலும், 37,000 பேர் மட்டுமே முல்லைத்தீவிலும் குடிபெயர்ந்தனர். கூடிய தொகைகளைச் சேர்த்தாலும் இவை 170,000 என்ற கணக்குக்கு வருவதற்கில்லை. வண. பிதா பத்திநாதன் சொல்லுகிற கணக்கில், அவர், சாதுரியமாக பழைய இடம் பெயர்ந்த மக்களையும் உள்வாங்குகிறார். இந்த அரசாங்கம் பதவியேற்ற போது, 2005இல் 300,000 இடம் பெயர்ந்த மக்களைப் பராமரிக்க வேண்டியிருந்தது. அவர்களில் பெரும்பாலோரானோர் 1990இல் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பகுதிகளிலிருந்து விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள். இவர்களில் கிட்டத்தட்ட 100,000 பேர் வரை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்தார்கள். ஐ.நா. அதிகாரிகளே இந்தத் தொகைகளை அறிவார்கள். நாங்கள் சமாதானப் பேச்சுவார்த்தைக் காலங்களில் விடுதலைப் புலிகள் ஊடாக அவர்களை மீள் குடியேற்ற எவ்வளவோ ஏற்பாடுகள் செய்தும் அவர்கள் ஒத்துவரவில்லை என்பது ஐ.நாவின் சர்வதேச அதிகாரிகளுக்குத் தெரியும். 2005 இல் இருந்த தொகைகள் 2006 இலும் 2007 இலும் கூடியது. விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை முறியடித்து, இராணுவம் கிழக்கு மாகாணத்தை அவர்களிடமிருந்து விடுவித்தபோது, அவை எல்லாவற்றையும் சேர்த்து பார்த்தாலும் முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் 127,000 மக்கள்தான் வருவார்கள். அவர்களில் 66,000பேருக்கு அரசாங்கமே பராமரிப்பு வழங்குகிறது. இதில் பகிடி என்னவென்றால் முல்லைத்தீவின் முழுத் தொகையுமே 146,000 மக்கள். அப்படியிருந்தும் 127,000 பேருக்கு அரசாங்கம் தொடர்ந்தும் பராமரிப்பு வழங்கியது. விடுதலைப் புலிகள் கொழுத்தற்கும் அரசாங்கத்தின் இந்தப் பரோபகாரம் அல்லது முட்டாள்தனம் காரணமாக இருக்கலாம். சுருங்கச் சொல்லப்போனால், அரசாங்கம் தனது மக்களுக்கான கடமையைச் செய்யும். கிழக்கு மாகாணத்தை விடுவிக்கச் சென்ற போது அங்கு 200,000 மேற்பட்ட மக்களின்இடப்பெயர்வு இருந்தது. அதை விடுவித்து 2006/2007 இல் 30,000க்கு குறைத்தோம். அதுபோல் திடமாக வடக்கையும் நாம் விடுவித்து ஜனநாயகத்தை இங்கு மீளச் செய்வோம். ஒருகுறுகிய காலத்தில் இது நடைபெறும். – என்று கூறப்பட்டது.






ஒருவரது யதார்த்தத்தை முறியடிக்க முடியாதவன் அந்தக் கருத்தை முன்வைத்தவனை தாக்குவதுபோல், கலாநிதி ராஜீவ் விஜயசிங்காவும், வண. பிதா பத்திநாதனை, இவர் கத்தோலிக்க திருச்சபைக்கு மேலான கத்தோலிக்கராக இருக்கிறார், அவரைப் பற்றி கொழும்பு, வவுனியா, யாழ்ப்பாண மாவட்டங்களுக்கே தெரியவில்லை. அவற்றின் வண பிதாக்கள் அவரைப் பற்றி அறியோம் என்கிறார்கள், ஆயுதப்படைகள் அவர் சொல்லியமாதிரி அட்டூழியங்களில் ஈடுபடவில்லை. பார்க்கபோனால், கத்தோலிக்க திருச்சபை பரந்தது. அதில், இவர் ஏதோ விதத்தில் அங்கத்தவராகலாம். ஆனால் அவரும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இருந்து எழுதுவதால், அவர்கள் சொன்னதை எழுதியிருக்கிறார்கள் எனப் பறை சாற்றினார் ராஜீவ் விஜேசிங்க.

அந்த வணக்கத்துக்குரியவர் மறைந்தபோது, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களே கண்ணீர் சிந்தின. யாழ்ப்பாணத்தில் வரலாறு காணாதளவில் வடக்கு, கிழக்கு, வவுனியா ஆயர்களும் எத்தனையோ வணப்பிதாக்களும் கதறியழ சுற்றமும் சொந்தமும் வழியனுப்பினர். முல்லைத்தீவு மக்கள் தங்கள் பங்குத் தந்தையாக சிலையெழுப்பினார்கள்.

அதே கலாநிதி ராஜீவ் விஜயசிங்கா அவரைப் போருக்குப் பின் தேடிச்சென்று மாங்குளத்தில் அவரை சந்தித்து, பின் அவர் ஒரு உன்னதமான மனிதன் என்று பாராட்டிச் சென்றார்.

உண்மைகள் உறங்குவதில்லை.

(வளரும்...)

Parroting Pathos - the BBC Sinhala Service pronounces
TUESDAY, 02 SEPTEMBER 2008 17:15 HITS: 692E-mailPrintPDF
Prof. Rajiva Wijesinha responds to the BBC Sinhala Service report of August 27 regarding a letter sent to the UN Chief supposedly by the Catholic Church.

with relt is being reproduced here since it was not used by the BBC; or since some of the issues raised deserve a wider provenance.
More Catholic than the Bishops

I write with reference to yet another misleading feature in the coverage by the BBC Sinhala Service of the Sri Lankan situation. On August 27th it headlined an item 'Catholic Church writes to Ban ki Moon' whereas the report was about a letter sent by Fr James Pathinathan, President of what is termed a Justice and Peace Commission.

The letter was full of errors and emotive language, for which the BBC of course cannot be blamed. Nor can Fr Pathinathan, since the poor soul seems to be in LTTE held territory, and cannot therefore be held responsible, by man at any rate, for his errors.

The Minister of Disaster Management and Human Rights contacted the anointed representatives of the Catholic Church as soon as the BBC pronouncement was brought to his notice. The Archbishop's Office in Colombo said that Fr Pathinathan came under the Bishop of Mannar. When we contacted the Bishop of Mannar, he said he thought Fr Pathinathan came under the Bishop of Jaffna. The Minister check with the Bishop on the situation in the Wanni, and he noted that the Sri Lankan forces had not harmed civilians. He asserted this unasked, since we were concerned about the humanitarian situation, an assertion that deserves due publicity, as Fr Pathinathan's outburst suggests otherwise.

We then contacted the Bishop of Jaffna, who also did not know about Fr Pathinathan. However the Catholic Church in Sri Lanka is almost as broad as the Anglican one in Britain, so it is possible that Fr Pathinathan sees himself as a regular member of the Church, and his Justice and Peace Commission as a sanctified body. The BBC however, even its Sinhala Service, should not promote his claims by suggesting that he speaks for the Church, Militant or otherwise.

Food and Protection Issues

With regard to the substance of his letter, his claims of a 'Draconian economic embargo' are strange when the government officials working in the Wanni as well as UN agencies testify to the fact that food and shelter have been supplied without cessation, inclusive of handouts for the IDPs. We monitor the prices in the area, and they have remained stable for the last couple of years, following a glitch at the time when the LTTE attacked one of the checkpoints and forced its closure. However the road from the south has remained open throughout, and a year ago we were able to persuade the ICRC to obtain the required guarantees to open it every day. Previously they had been restricted, despite government requests, to three days a week.

The BBC quotes the good Father as saying that 'The sanctity of the civilian settlements, hospitals, schools and places of worship are blatantly violated with impunity'. This is contradicted both by the Bishop's appreciation of the care taken by the forces not to harm civilians and also by the absence of claims that any such violation has taken place. Even the smallest collateral damage to any such place is promptly circulated around the world, sometimes through the good offices of the BBC Sinhala Service. However there has been almost no reporting of such over the last couple of months since the forces started moving into previously LTTE held territory in the North. In such a context the BBC failure to draw attention to the fraudulent nature of his claims is regrettable.

The Sri Lankan government, through its dedicated officials still working in those areas under difficult circumstances, monitors the situation carefully, and provides humanitarian assistance as quickly as possible when it is required. It is for this reason that even the most dedicated enemies of the Sri Lankan state find it difficult to do more than predict dire problems, rather than claim they are occurring – as with the recent assertion on the LTTE Peace Secretariat Website, 'Kilinochchi medical chief warns health disaster if precaution not taken'. Of course. But we are taking precautions, whereas the LTTE is trying to precipitate a disaster by not letting people leave.

Manipulation of Statistics

It is also nonsense to talk of 170,000 recently displaced. At the last meeting of the Ministries concerned, along with the UNHCR, it was noted that additional displacements up to the end of July in the Kilinochchi District came to about 17,000. For Mullaitivu the figure was 37,000. Even assuming larger numbers in August, the figure is nothing like 170,000.

The figures being quoted are because of what are termed old IDPs, some of whom have been dislocated again. It may not be remembered that, when this government took office at the end of 2005, there was a caseload of over 300,000 IDPs who were looked after by government. A large proportion of these were Muslims expelled by the LTTE from the North in 1990. No previous government had tried to alleviate their difficulties, perhaps because they were engaged in appeasement of the LTTE. That pusillanimity has now ceased and, as Prof Walter Kalin UN Special Representative on the Human Rights of IDPs noted, this government has made a start in helping those suffering people.

Unfortunately about another 100,000 of those old IDPs were in areas controlled by the LTTE. There was no change in their status even during the Ceasefire Period when the then government bent over backwards to assist the LTTE to rehabilitate itself and those it controlled. All this was to no avail, perhaps because the LTTE took advantage of the rations the government continued to supply in terms of figures that were regularly inflated, to 94,000 for instance for Mullaitivu District.

The 2005 figures increased during 2006 and 2007, following LTTE onslaughts which the forces repulsed, going on then to liberate the East. We saw then some obvious evidence of double counting, which led to a small reduction, but even so, at the time current operations began, the figures for the two districts controlled by the LTTE, Mullaitivu and Kilinochchi, came to 127,000 and 66,000, to all of whom government supplied rations.
Interestingly, the estimate for the entire population of Mullaitivu was 146,000, but despite this the government of Sri Lanka continued to supply food for 127,000 people. You can now understand why the LTTE's fighters are so hefty. Some people might call this altruism of the Sri Lankan government foolish, but we know that if we let up on such supplies it would be innocent civilians who suffer, and the LTTE fighters would continue hefty. We have therefore fed all our people for the last decade, and will continue to do so.

In short, the government will do its duty by its people. If a crisis is imminent, it is because the LTTE will not let our people escape to cleared territory, it is because they will place difficulties in the way of the assistance we continue to send up. Unfortunately some reports seek, as part of a spurious balance or neutrality, to suggest that the government is also at fault, for not ceasing at once to launch attacks. Such a course would only continue the suffering of the IDPs whom the LTTE has kept as such for several decades – unlike in the East, where government reduced the over 200,000 IDPs caused by the 2006/2007 liberation movement to fewer than 30,000 now. We plan to do the same for the North, and restore democracy there, within a similarly short time frame

# சட்டத்துறையில் சாணக்கியமும், அனுபவமும் வாய்ந்த பெண் ஆளுமை சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசா

## சிறிதரன் எம்.பி. இரங்கல்

சட்டத்துறையில் சாணக்கியமும், அனுபவமும் வாய்ந்த பெண் ஆளுமையும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சட்டச் செயலாளரும், அரசியல் உயர்மட்டக் குழு மற்றும் மத்திய செயற்குழு உறுப்பினரும், கொழும்புக் கிளையின் தலைவருமான, ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா அவர்களின் பாரியாருமான, திருமதி கௌரிசங்கரி தவராசா, கொரோனாப் பெருந்தொற்றால் இயற்கை எய்தியமை எமக்கு அதிர்ச்சியையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அளிக்கிறது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்.

கௌரி சங்கரி தவராசாவின் மறைவு தொடர்பில் வழங்கிய இரங்கலில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

சர்வதேச ரீதியிலான கவனத்தை ஈர்த்த பல்வேறு குற்றவியல் வழக்குகளில் ஆஜராகி நீதியை நிலைநாட்டிய சட்ட ஆளுமையாக எல்லோராலும் அறியப்பட்ட அவரது திடீர் மறைவு எம்மை பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

தமிழ்த் தேசியத்தின் பாதையில் பயணிக்கும் எமது கட்சி மீதும், அதன் உறுப்பினர்கள் மீதும் காலத்துக்குக் காலம் ஆளும் அரச தரப்புகளால் வலிந்து சுமத்தப்பட்ட அதிகாரத் திணிப்புக்களையெல்லாம் சட்டரீதியாக நீர்த்துப்போகச் செய்ததில் கே.வி.தவராசாவைப் போலவே அவரது பாரியார் திருமதி கௌரிசங்கரிக்கும் பெரும் பங்குண்டு.

கொள்கையின் பாற்பட்ட அரசியற் கூட்டிணைவுக்கு அப்பால், குடும்ப நண்பர்களாகவும், தனிப்பட்ட சட்ட ஆலோசகர்களாகவும் திருமதி தவராசா தம்பதியினருக்கும் எனக்குமான தனிப்பட்ட உறவு ஆழமானதும், ஆத்மார்த்தமானதுமாகும்.

நான் நாடாளுமன்ற உறுப்பினராக செயற்படத் தொடங்கிய 2010ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை, அரசாலும், அரச படைகளாலும் என்மீது வலிந்து மேற்கொள்ளப்பட்ட அத்தனை அச்சுறுத்தல்களையும் கடந்துவருவதில் சகோதரி கௌரிசங்கரி அவர்களின் பங்கும், வழிகாட்டலும் கனதியானது.

2013 ஆம் ஆண்டு அரச படைகளாலும், புலனாய்வாளர்களாலும் எனது அலுவலகம் மீது திட்டமிட்ட வகையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட வேளை, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, 13 மாதங்கள் சிறையிலடைக்கப்பட்ட எனது அலுவலக உத்தியோகத்தர்கள் இருவரினதும் விடுதலைக்கான சட்டரீதியான முதற்படி இவரின் முன்னெடுப்பே ஆகும்.

இதுபோன்றே உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட எத்தனையோ இளைஞர்களின் விடுதலையை சட்டரீதியாக




சாத்தியமாக்கியதிலும் இவருக்கு அளப்பெரும் பங்குண்டு.

இன்னமும் அவர் ஆற்ற வேண்டிய பணிகளின் பரப்பு அதிகமாயுள்ள காலச்சூழலில், யாரும் எதிர்பாராத விதமாய் நிகழ்ந்துள்ள அவரின் இழப்பை ஏற்கமுடியாவிட்டாலும், இயற்கையின் விதிகளுக்கு கட்டுப்பட்டு அன்னாரின் ஆத்மா அமைதி பெற பிரார்த்திக்கும் அதேவேளை, வாழ்விலும், தொழிலிலும் இணையற்ற துணையாய் உடனிருந்த தன் பாரியாரின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அண்ணன் தவராசா அவர்களின் துயரில் நாமும் பங்கெடுக்கிறோம். - என்று தெரிவித்தார்.

# சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரியின் மறைவு விடுதலைக்காக பயணிக்கும் தமிழர்க்கு பேரிழப்பு!

## நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன்



சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவின் மறைவு விடுதலைக்காக பயணிக்கும் தமிழ் சமூகத்துக்கு மற்றுமொரு பேரிழப்பாகும் என்று தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவின் மறைவை அடுத்து அவர் வெளியிட்டுள்ள இரங்கல் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் பாரியாரான சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசாவின் திடீர் மறைவுச் செய்தி அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது.

கௌரிசங்கரி தவராசா விசேடமாக பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர், யுவதிகளுக்காக தொடர்ச்சியாகக் குரல்கொடுத்து வந்திருந்ததோடு, அவர்களின் விடுதலைக்காக பல வழக்குகளில் ஆஜராகியும் உள்ளார்.

அதுமட்டுமன்றி, ஜனநாயகம், மனித உரிமைகள், பெண்கள், சிறுவர் உரிமைகள் ஆகியவற்றுக்காகப் பல தருணங்களில் முன்னின்று போராடியுள்ளமையோடு தொடர்ச்சியாக குரல்கொடுத்தும் வந்திருந்தார்.

இனவிடுதலையை நோக்கிப் பயணிக்கும் தமிழ் சமூகத்துக்கு நேரடியாகவும், திரைமறைவிலும் அரசியல், சமூக, பொருளாதார விடயங்களில் பாரியளவு பங்களிப்பைச் செய்து வந்தும் இருந்தார்.

அவ்விதமான ஒருவரின் மறைவு தமிழினத்துக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவால் துயர் உற்றுள்ள அவரது கணவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளிட்ட அனைவரினதும் துயரத்தில் பங்கெடுப்பதோடு ஆழ்ந்த இரங்கல்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். - என்றுள்ளது.

# ஆசிரியர் சம்பளப் பிரச்சினைக்கு அடுத்த வாரம் தீர்வு – டலஸ்



அதிபர் - ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பாக அமைச்சரவையின் தீர்மானத்தை எதிர்வரும் வாரம் அறிவிப்பதாக அமைச்சரவை பேச்சாளர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பின்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சம்பளப் பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழு சமர்ப்பித்த அறிக்கை கடந்த திங்கட்கிழமை அமைச்சரவையில் சமர்ப் பிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், அடுத்த வாரம் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் அறிக்கை தொடர்பாகத் தீர்மானிக்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கை அரசியலில் புரட்சியை முன்னெடுத்துச்சென்றவர் மங்கள

## சிறிலங்கா சுதந்திரக் கட்சி அனுதாபம்

இலங்கை அரசியலில் அரசியல் புரட்சியொன்றை முன்னெடுத்த மங்கள சமரவீர நாட்டுக்கு சிறந்த முன்மாதிரியானவர். அவரின் மறைவு பேரிழப்பாகும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவை முன்னிட்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி விடுத்துள்ள அனுதாபச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி அரசியலுக்கு பிரவேசித்து, நாடாளுமன்ற உறுப்பினராக, அமைச்சராக செயற்பட்டு வந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மங்கள சமரவீரவின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினர், அவர் ஆதரித்து வந்த மாத்தறை மாவட்ட மக்களுக்கு சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம். - என்றுள்ளது.

# அரசின் அதிபலத்துக்கு அஞ்சாது துணிந்து நின்று வழக்காடியவர்!

## கௌரி சங்கரி பற்றி சாலிய பீரிஸ் கருத்து

அரசின் அதிபலத்திற்கு அஞ்சாது துணிச்சலுடன் அடிக்கடி சவாலாக எழுந்து நின்று தசாப்த காலாகாலமாக வழக்காடி கடினமாக - துணிகரமாக முன்னெடுத்தவர் எமது சகோதரி சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா தவறிவிட்டார். தனது கட்சிக்காரர்களுக்காக சளைக்காது போராடிய வீரப்பெண்மணி அவர்.

- இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ்.

அவரது இரங்கல் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

ஜனவரி 1997 ஆம் ஆண்டு ஒரு நாள். நான் சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து விலகி சில நாள்களில் எனக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது.

அழைத்தவர் திருமதி கௌரி சங்கரி தவராசா. நான் திணைக்களத்திலிருந்து விலகி விட்டேன் எனவும் எனக்கு வேலை கொடுக்கும்படி அமீன் கேட்டிருக்கிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

சந்தேகநபர் முன்னிலைப்பட தவறியதால் பிணையாளி ஒருவர் கடுகடுப்பான மேல்நீதிமன்ற நீதிபதி முன் ஆஜராகி றிமாண்டில்போடப்படக்கூடிய வழக்கு அது. அந்த வழக்கில் நியமித்து ஆஜராகும்படி பிணையாளி சார்பாக நியமித்தார்.

நான் வாதாடி பிணையாளியைக் காப்பாற்றினேன். அன்றிலிருந்து அவர் பல வழக்குகளில் என்னை அமர்த்தினார். இவ்வாறு எனது வளர்ச்சிக்கு ஆதரவளித்தார். அவர் மூலம் தவா அறிமுகமானார். உயர் பதவிகளி லுள்ளவர்களிடத்தில் அவருக்கு நண்பர்கள் இருந்தார்கள்.

இருப்பினும் அவர் வலிந்து பலருக்கும் உதவுவார். கடினமான சிலவேளை சர்ச்சையான வழக்குகளில் கூட அவர் ஆஜராவார். அவர் மனித உரிமை மீறல் வழக்குகள் பலவற்றை நடத்தியிருக்கிறார். நீதிமன்ற தொகுதிவளாகத்தில் அன்னாரது இழப்பு உணரப்படுகிறது. அன்னாரது பிரிவால் துயருறும் எமது நண்பர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வீ.தவராசாவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள். - என்றும் தெரிவித்துள்ளார்.

# சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா துணிகரமாக நிமிர்ந்து நிற்கும் இரும்புச்சீமாட்டி!

## அகில இலங்கை சட்டத்தரணிகள் சங்கச் செயலாளர் ரஜீவ் அமரசூரிய இரங்கல்

சிரேஷ்ட சட்டத்தரணியும் மனித உரிமை செயற்பாட்டாளருமான திருமதி கௌரி சங்கரி தவராசா திடீர் உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக்கிளை தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி. தவராசாவின் மனைவியான இவர் குற்றவியல் வழக்கறிஞராக செயற்பட்டு வந்தார். இந்நிலையில், அவரின் மறைவிற்கு பல்வேறு தரப்பினரும் தமது இரங்கல்களை தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில், அகில இலங்கை சட்டத்தரணிகள் சங்கச் செயலாளர் ரஜீவ் அமரசூரிய தமது இரங்கல்களை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அகில இலங்கை சட்டத்தரணிகள் சங்கச் செயலாளர் ரஜீவ் அமரசூரிய தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளவை வருமாறு -

படுபயங்கர கொவிட் 19 ஆல் இழந்துவிட்ட சட்டத்தரணி திருமதி கௌரி சங்கரி தவராசாவின் இழப்பால் ஆழ்ந்த துயரடைந்தோம். தொழில் நிபுணத்துவத்துக்கோ சட்டவாட் சிக்கோ பிரச்சினை அல்லது அச்சுறுத்தல்கள் வரும்போ தெல்லாம் துணிகரமாக நிமிர்ந்து நிற்கும் இரும்புச்சீமாட்டி அவர். இருப்பினும் தன்னடக்கமான மனிதாபிமானி. தொலைபேசி அழைப்புகளுக்கு தவறாது பதில ளிக்கும் பண்பாளர். சட்டவளாகத்தில் பெரும் நிரப்ப முடியா வெற்றிடத்தை விட்டுச்சென்று விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையட்டும் ஜனாதிபதி சட்டத் தரணி கே.வீ.தவராசாவுக்கு ஆழ்ந்த அனுதாபங்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

# ஊரடங்கு நீடிக்கப்படுமா? நாளைய தினம் இறுதி முடிவு

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு



**நாட்டில் முழுநேரமும் பிறப்பிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கை நீடிப்பதா அல்லது நீக்குவதா என்பது தொடர்பில் நாளை (27) அறிவிக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.**

**நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 30ஆம் திகதி வரை 10 நாள்களுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதும் இலங்கையில் சில நாள்கள் தொடர்ச்சியாக நாளாந்தம் 4 ஆயிரத்துக்கும் அதிகமான கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

இந்தநிலையிலேயே ஊரடங்கை நீடிப்பதா அல்லது நீக்குவதா என்பது தொடர்பில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை அறிவிக்கப்படவுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

# விமானப்படைத் தளபதியும் அவசர சிகிச்சைப் பிரிவில்

## பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா உறுதி

கொழும்பு, ஓக. 26

இலங்கை விமானப் படையின் தளபதி எயார் மாஷர்ல் சுதர்ஷன பத்திரன திடீரென சுகயீனமுற்ற நிலையில் கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பி.சி.ஆர். பரிசோதனையின் போது அவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனாத் தொற்று தீவிரமடைந்துள்ள நிலையில், அதன்



தாக்கத்துக்கு பாதுகாப்புப் பிரிவின் முக்கியஸ்தர்களும் இலக்காகி வருகின்றனர்.

# சித்தங்கேணியில் குடும்பஸ்தர் கம்பியால் தாக்கிப் படுகொலை

## அயல் வீட்டுக்காரர்கள் வெறியாட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., வட்டுக்கோட்டைபொலிஸ்பிரிவுக்குட்பட்ட சித்தங்கேணி கலைவாணி வீதிப் பகுதியில் வசிக்கும் குடும் பஸ்தர் ஒருவர் அயல் வீட்டுக்காரர்களால் கம்பியால் தாக்கிப் படுகொலை செய்யப்படுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த நபருக்கும் அவரது அயல் வீட்டுக்காரருக்கும் கடந்த மூன்று மாதங்களாகக்காணிப்பிரச்சினைஏற்பட்டிருந்தது.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் அவருக்கும் அவரது அயல் வீட்டுக்காரர்களுக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டது. அது பின்னர் கைகலப்பாக மாறியது.

இதன்போது மரணமடைந்த நபரும் அவரதுமகளும்அயல்வீட்டுக்காரர்களால் கம்பியால் கடுமையான தாக்குதலுக்குள்ளாகினர்.

தாக்குதலுக்குள்ளான குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்தது. அவரின் மகள்தலையில்பலத்தகாயமடைந்துள்ள நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் இராசநாயகம் ரெஜியானந்தன் (வயது 49) என்பவரே மரணமடைந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### 119 ஆண்கள், 79 பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்றும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 7 ஆயிரத்து 948 ஆக அதிகரித்துள்ளது. (22)

### முல்லைத்தீவிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் இதுவரையில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 08 ஆக அதிகரித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைய நாள்களாக கொரோனா மரணங்கள் சடுதியாக அதிகரித்து வருகின்ற நிலையில் மக்களை மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

# குடாநாட்டில் இன்று ஒரே நாளில் 239 பேருக்கு கொரோனா உறுதி

## மாவட்ட அரச அதிபர் மகேசன் தகவல்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று ஒரே நாளில் அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனை பெறுபேறு களின்படி 239 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்படி விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

'யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 10 ஆயிரத்து 725 பேருக்கு இற்றைவரை கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கடந்த காலத்தைவிட தொற்றாளர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளதோடு இறப்புக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

யாழில் நேற்றைய கணக்கெடுப்பின்படி 213 பேர் இதுவரை இறப்புக்குள்ளாகியுள்ளார்கள். மேலும் 3 ஆயிரத்து 686 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 548 அங்கத்தவர்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளார்கள்.

எனவே, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பொதுமக்கள் இறுக்கமாக சுகாதார கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டிய தேவையுள்ளது.

சுகாதார அமைச்சின் வழிகாட்டல் மற்றும் கொரோனா செயலணியின் வழிகாட்டலுக்கு அமைய பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதுடன் மிக அவசிய தேவைகளுக்கு மட்டுமே பொதுமக்கள் வீட்டிலிருந்து வெளியே வரவேண்டும்.

அதேவேளை, சுகாதார நடைமுறைகளான முகக்கவசம் அணிதல் வேண்டும், சமூக இடைவெளியைப் பேண



வேண்டும். தேவையற்ற நடமாட்டம் மற்றும் ஒன்றுகூடல்களைத் தவிர்க்க வேண்டும்.

எனவே, இந்த நடைமுறைகளைப் பின்பற்றி உங்களையும், குடும்பத்தையும், சமூகத்தையும் பாதுகாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தடுப்பூசி வழங்கும்நடவடிக்கைகள்தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன. அதேவேளை, எழுந்து நடமாட முடியாத வயோதிபர்களுக்கு வீடு வீடாகச் சென்று தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகளை சுகாதாரத் தரப்பினர், கிராமசேவையாளர்கள் மற்றும் இராணுவத்தினர் ஆகியோர் ஒன்றிணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.

தடுப்பூசிகளை விரைந்து பெற்றுக் கொள்வது எமது பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்துவதற்காகவே ஆகும். இவை இறப்புக்களை தவிர்க்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகிறது.

ஆகவே, பொதுமக்கள் அரசின் அறிவுறுத்தலின்படி தங்களையும், சமூகத்தையும் பாதுகாக்கும் வகையில் தடுப்பூசிகளைப் பெற்று தத்தமது பாதுகாப்பை உறுதிசெய்து கொள்வது அவசியமாகும் - என்றார்.

# யாழில் வாள்வெட்டில் உயிரிழந்த இளைஞருக்குக் கொரோனாவா?

## மீள்பரிசோதனைக்கு நீதிவான் உத்தரவு

யாழ்., குருநகரில் வன்முறைக் கும்பலால் வாளால் வெட் டிப் படுகொலை செய்யப்பட்ட இளைஞருக்குக் கொரோனாத் தொற்று உள்ளது என யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால் உயிரிழந்த இளைஞரின் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர் குழப்பமடைந்தமையுடன் இளைஞரின் உடலைத் தம்மிடம் தரும்படி நேற்று வைத்தியசாலையில் பெரும் கலவரத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், சம்பவ இடத்துக்குப் பொலிஸார் வரவழைக்கப்பட்டமையுடன் இது தொடர்பில் யாழ். நீதிவான் பீற்றர் போலின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இதையடுத்து உயிரிழந்த குறித்த இளைஞருக்குத் திரும்பவும் பி.சி.ஆர். பரிசோதனை செய்யுமாறும், பரிசோதனையின் அறிக்கையை யாழ்.நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் நீதிவான் நேற்றிரவு உத்தரவிட்டார்.

இதனடிப்படையில் மீண்டும் குறித்த இளைஞருக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## பிரபல பல்பொருள் அங்காடி வவுனியாவில் தனிமைப்படுத்தல்

வவுனியா புதிய பஸ் நிலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ள பிரபல பல்பொருள் அங்காடி (சுப்பர்மார்க்கெட்) சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப் பட்டது.

குறித்த அங்காடியில் பணிபுரியும் ஊழியர் ஒருவரின் உறவினருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த அங்காடி 14 நாள்களுக்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அங்கு பணிபுரியும் ஊழியர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## ஒட்சிசன் வழங்கியமைக்காக இந்தியாவுக்கு நன்றி தெரிவிப்பு

நாட்டுக்குத் தேவையான ஒட்சிசனை உரிய நேரத்தில் வழங்கியமைக்காக இந்திய அரசாங்கத்துக்கு இலங்கை அரசாங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் அமைச்சரவை பேச்சாளரும் வெகுஜன ஊடக அமைச்சருமான டலஸ் அழகப்பெரும, நாட்டுக்குத் தேவையான ஒட்சிசனை உரியநேரத்தில் இந்தியா வழங்கியமைக்காக அரசாங்கத்தின் சார்பில் இவ்வாறு நன்றி தெரிவித்தார்.

நாட்டின் ஒட்சிசன் தேவையை முறையாக முன்னெடுப்பதற்காக அரசாங்கம் முன்வைத்த கோரிக்கைக்கு பதில் அளிக்கும் வகையில் இந்திய அரசாங்கம் உடனடியாக 140 மெற்றிக் தொன் ஒட்சிசனை வழங்கியதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எமது அயல் நட்புறவு நாடு என்ற ரீதியில் இதுதொடர்பாக இந்திய மக்களுக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

## ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனால் சமகால அரசியல் கருத்தமர்வு இன்று

மீண்டும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் துறைசார் சட்டத்தரணிகள் இணைந்து வழங்கும் சமகால அரசியல் மற்றும் சட்டங்கள் தொடர்பாக இளையோர் மற்றும் ஆர்வமுள்ளவர்களுக்கான இணைய ரீதியான தொடர் வகுப்புகள் இடம்பெறவுள்ளன.

இதன் முதலாவது அங்கமாக இன்று (வியாழக்கிழமை) மாலை 7 மணிக்கு சுமந்திரனால் முன்வைக்கப்பட்ட கொரோனாவை கட்டுப்படுத்தும் சுகாதார வழிகாட்டல் சட்டமூலம் தொடர்பான விளக்க விரிவு இடம்பெறவுள்ளது.

இலங்கை மற்றும் வெளிநாடுகளில் வதியும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ள முடியும்.

ஆர்வமுள்ளவர்கள் 0706400418 எனும் வட்ஸ் அப் இலக்கத்துக்கு உங்கள் பெயர் மற்றும் இடத்தை அனுப்பி வைக்கவும்.

## யாழ். நாவலர் கலாசார மண்டபத்தை மத்தியிடம் கொடுப்பது அபாயகரமானது!

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கு கொடுக்கிறோம் என்ற போர்வையில் நாவலர் கலாசார மண்டபத்தை எங்களுடைய கட்டுப்பாட்டை மீறி மத்திய அரசுக்கு கொடுப்பது அபாயகரமானதென யாழ். மாநகர முதல்வரும் சட்டத்தரணியுமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ் மாநகரசபை சபையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாவலர் கலாசார மண்டபத்தை இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் கையளிக்குமாறு ஒரு கோரிக்கை எனக்கு முன்வைக்கப்பட்டிருக்கிறது. அவர்களது கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் முகமாக சமயப் பெரியார்களால் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

மாநகர சபையில் இருந்து நாவலர் கலாசார மண்டபத்தை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கு வழங்க வேண்டும் என்கிற கோரிக்கை தொடர்பாக நாங்கள் மாநகர சபையில் கடந்த கூட்டத்தில் விவாதத்துக்கு எடுத்திருந்தோம். அந்தக் கூட்டத்திலே நான், நாவலர் கலாசார மண்டபத்தை மத்திய அரசுக்கு கீழே உள்ள திணைக்களத்துக்கு வழங்கக்கூடாதெனத் தெரிவித்திருந்தேன். அந்த விவகாரம் அடுத்த கூட்டத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

நாவலர் பிறந்து வளர்ந்த பூமியிலே இருக்கின்ற ஒரு சொத்து நாவலர் மண்டபம். நாவலர் சைவம் என்பதற்கு அப்பால் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் போராடிய ஒருவராகக் கருதப்படுபவர். ஆகவே, அந்த வகையில் அவருடைய இடத்தில் அமைக்கப்பட்ட ஒரு சொத்தை இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கு கொடுக்கிறோம் என்ற போர்வையில் எங்களுடைய கட்டுப்பாட்டை மீறி மத்திய அரசுக்குக் கொடுப்பது அபாயம்.

அந்த வகையில் மத்திய அரசாங்கத்தின் கீழ் வருகின்ற இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் நாவலர் கலாசார மண்டபம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்ற தரப்புகளோடு பேச வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டோம். மாநகர சபைக்குச் சொந்தமான ஒரு சொத்தை மத்திய அரசாங்கத்திடம் கையளிப்பது என்பது தமிழ் மக்களுக்குச் செய்கின்ற மிகப் பெரிய துரோகமாக அமைந்து விடும்.

கடந்த காலங்களில் நாவலர் கலாசார மண்டபம் மாநகர சபையால் சரியாக நிர்வகிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு காணப்படுகிறது. ஆனால் அந்த குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்ற தரப்புகளோடு இணைந்து இதனுடைய முகாமைத்துவத்தை நாங்கள் தனியான ஒரு நிறுவனம் ஒன்றை அமைத்து ஒரு நிதியமாகவோ, முகாமைத்துவக் குழுவாக திறம்பட நிர்வகிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

நாவலர் கலாசார மண்டபத்தை மத்திய அரசுக்கு கீழுள்ள திணைக்களத்திடம் கையளிக்க வேண்டாமென பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் சமூகத்திலுள்ள பலரும் தெரிவித்துள்ளனர். நாவலர் கலாசார மண்டபத்தை சிறப்பாக நிர்வகிக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. சில தவறுகள் விடப்பட்டு இருந்தாலும் அவை களையப்பட்டு சிறப்பாக நிர்வகிக்கப்படுமே ஒளிய அதை நழுவ விடக்கூடாது என்பதே என்னுடைய கருத்து.

மாநகர சபையில் அங்கம் வகிக்கின்ற அனைத்துக் கட்சிகளிடமும் நாம் விடுக்கின்ற கோரிக்கை தயவுசெய்து நாவலர் கலாசார மண்டபத்தை மத்திய அரசுக்கு கொடுக்க காரணமாக அமைந்துவிடாதீர்கள். அது எங்களுடைய எதிர்கால சந்ததிக்கு செய்கின்ற துரோகமாக அமையும். - என்றார்.



14

**வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி 'காலைக்கதிர்' நடாத்தும்**

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2021

### போட்டி விதிகள்

1. இந்தப் போட்டியில் ஆர்வமுடைய அனைவரும் பங்குபற்ற முடியும்.
2. 13.08.2021 முதல் எதிர்வரும் 06.09.2021 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விவரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதி அனுப்புவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

### பரிசு விவரம் :

**முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 7,000.00**
**இரண்டாம் இடம் - ரூபா 5,000.00**
**மூன்றாம் இடம் - ரூபா 3,000.00**
**தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00**

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 12.09.2021 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. யாழ்ப்பாணப் பட்டினம் மருவிய பெருமான் என்று நல்லூர் முருகனைக் குறிப்பிட்டுப் பாடியவர் யார்?**

..........................................................................

**2. கந்தபுராணம் எத்தனை பாடல்களைக் கொண்டமைந்தது?**

..........................................................................

**3. குமாரதந்திரம் குறிப்பிடும் முருக மூர்த்தங்கள் எத்தனை?**

..........................................................................

**4. செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் தலவிருட்சம் என்ன?**

..........................................................................

**5. நல்லூர் கந்தசுவாமி ஆலய சித்திரத் தேரின் ஸ்தபதி யார்?**

..........................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 01.09.2021 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

14

பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-

1. முழுப் பெயர் : ------------------------------------------------
2. பிறந்த திகதி : ------------------------------------------------
3. கல்வி கற்கும் தரம் : ------------------------------------------
4. பாடசாலை : ---------------------------------------------------
5. முகவரி : -----------------------------------------------------

..........................................
கையொப்பம்

காலைக்கதிர் Kalaikkathir

# ஒரு ரூபா பணம் திருடினேனென நிரூபியுங்கள் அரசியலை விட்டு நான் ஒதுங்கிவிடுகின்றேன்

## மணிவண்ணன் கடும் சீற்றம்

ஒரு ரூபா பணம் திருடினேன் என நிரூபித் தால் நான் அரசியலில் இருந்து ஒதுங்கிவிடுவேன் என யாழ். மாநகர முதல்வரும் சட்டத்தரணியுமான விஸ்வலிங்கம் மணி வண்ணன் தெரிவித்தார்.

அத்துடன் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்தால் எதிர்காலத்தில் வழக்குத் தொடரவும் நான் தயாரென அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ் மாநகர சபையில் இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில், மாநகர எல்லைக்குள் இரவோடிரவாக விளம்பரப் பலகை அமைப்பதில் ஏற்பட்ட சர்ச்சை தொடர்பாக உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

என்னைப் பொறுத்தவரையில் இது ஒரு சிலரால் விஷமத்தனமாக செய்யப்படுகின்ற அரசியல் காழ்ப்புணர்ச்சிமிக்கதான நடவடிக்கை. இவை மாநகர சபையினுடைய பூரண அனுமதியுடனேயே செய்யப்பட்டு வருகிறது.

நான் மாநகர முதல்வராகப் பொறுப்பேற்ற பின்னர் முதலாம் மாதம் 13ஆம் திகதி நடந்த முதல் கூட்டத்தில் இது தொடர்பாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பாக பகிரங்கமாக யாழ்ப்பாணத்திலுள்ள பத்திரிகைகளில் செய்தி பிரசுரிக்க கோரப்பட்டதுடன், இரண்டாம் மாதம் 13 ஆம் திகதி பத்திரிகைகளில் பகிரங்கமாக வீதிகளில் விளம்பரங்களை காட்சிப்படுத்த விளம்பரதாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

யாழ். மாநகர எல்லைக்குள் இருக்கின்ற வரலாற்று புகழ்பெற்ற இடங்களை காட்சிப்படுத்துவதற்கும் அதனூடாக சுற்றுலாப்பயணிகளைத் தூண்டுவதற்கும் மாநகர எல்லைகளை அடையாளப்படுத்துவதற்கும், நாங்கள் வீதியிலே விளம்பரப் பலகைகளை அமைக்க அனுமதி தாருங்களென வீதி அபிவிருத்தி அதிகாரிசபைக்கு ஒருகடிதம்அனுப்பப்பட்டது.

மாநகரசபைக்கு இந்த வருட கணக்காய்வின்படி கொரோனா காரணமாக 23.9 கோடி ரூபா வருமான இழப்பு ஏற்பட்டிருக்கின்றது. இதனால் எங்களுடைய வட்டார அபிவிருத்திகள் பாதிக்கப்படுதல், ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலை, குப்பைகளை அகற்றும் பணிகளை செய்ய முடியாத நிலை ஏற்படுமென்பதால் நாங்கள் வருமானத்தை அதிகரிக்க புதுப்புது வழிகளை யோசிக்க வேண்டியுள்ளது.

இந்த விளம்பரப் பலகை ஒன்றின் மூலம் ஒரு வருடத்துக்கு ஏறத்தாழ ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபா வருமானம் கிடைக்கும். மொத்தமாக 20 லட்சம் வரை எதிர்பாராத ஒரு வருமானம் கிடைக்கவுள்ளது. அதேபோல் ஒவ்வொரு வருடமும் இந்தக் தொகை மாநகர சபைக்குக் கிடைக்கும். நாங்கள் எடுத்த தீர்மானம் தொடர்பாக பலதடவை மாநகரசபைக் கூட்டங்களின் போது தெரிவித்திருந்தோம். அப்போது இவர்கள் துங்கிக்கொண்டு இருந்தார்களா? சிங்கள நிறுவனத்துக்கு ஒப்பந்தம் வழங்கியுள்ளார், ஒளித்து செய்கின்றாரெனக் கூறுகின்றனர். அதிகளவு தொகையை விளம்பரப் பலகைக்கு வழங்க நிறுவனங்கள் தயாரில்லை.

இரண்டு இடத்துக்கு மாத்திரமே தற்போது விளம்பரதாரர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள். தமிழ் நிறுவனங்கள் இதற்காக முன்வந்தால் ஒப்பந்தங்களை வழங்குவதற்கு நான் தயாராக இருக்கின்றேன்.

எதற்காக இனவாதம் பேச வேண்டுமென நாங்கள் யோசிக்க வேண்டும். இங்கு உள்ள தமிழ் நிறுவனங்கள் முன்வந்தால் எட்டு விதீகள் உள்ளன. அவற்றை அவர்களுக்கு வழங்க முடியும்.

இது தொடர்பாக அபிவிருத்தி அதிகார சபையிடம் அனுமதி கேட்டபோது வீதியை பயன்படுத்துவதற்கான அபிவிருத்தி கட்டணமாக 8 லட்சம் ரூபா செலுத்த வேண்டுமென கோரப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை கோரிய 8 லட்சம் ரூபா அதிகமெனக்கூறி எந்த விளம்பர நிறுவனங்களும் முன்வராத நிலையில் 'மாநகரம் அன்புடன் வரவேற்கின்றது' என்ற விளம்பரப் பலகையை அமைக்க முடியாமல் போய் விடும்என்பதற்காகநான்வீதிஅபிவிருத்தி அதிகார சபைக்கு 50 வீதம் குறைக்க சிபாரிசு செய்தேன்.

அதை குறைப்பதும் குறைக்காமல் விடுவதும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினுடைய தீர்மானத்துக்குட்பட்டது. இதனை ஏன் குழப்புகிறார்கள் எனத் தெரியவில்லை. நான் இவற்றில் காசடித்தேன் என நிரூபித்தால் அரசியலை விட்டுவிலகத் தயார். அதேபோல அந்த பணத்தின் இரு மடங்கை நான் வழங்கத் தயார்.

என்னுடைய சம்பளப் பணத்தை நான் இன்னொருவருக்கு வழங்குகிறேன். முன்னாள் முதல்வர் 2 லட்சத்துக்கு மேலே எடுத்தார் என ஒரு கருத்து ஒன்று இருக்கிறது. என்னுடைய சொந்த பணத்திலேயே மக்கள் பணிகளை செய்து கொண்டுள்ளேன். அப்படிப்பட்ட நான் சவால் விடுகிறேன். நான் ஒரு ரூபா பணம் திருடினேன் என நிரூபியுங்கள் நான் அரசியலில் இருந்து ஒதுங்கி விடுவேன். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# நாயக்க தேரர்களை சென்று சந்தித்த பொலிஸ் அதிகாரிகளிடம் விசாரணை

## முன்னாள் அரச மற்றும் பொலிஸ் அதிகாரிகள் குழு பரிந்துரை

அரச வாகனங்களில், சீருடையுடன் தமது பிரதேசத்துக்கு வெளியே சென்று பீடாதிபதிகளை சந்தித்து ஊடகங்களின் முன்னிலையில் மிகவும் ஒழுக்கக்கேடான முறையில் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்திய உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக பொலிஸ் ஆணைக்குழு விசாரணை நடத்த வேண்டுமென, முன்னாள் அரச மற்றும் பொலிஸ் அதிகாரிகள் குழு பரிந்துரைத்துள்ளது.

இரண்டு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களான நந்தன முனசிங்க மற்றும் தேசபந்து தென்னக்கோன், தலைமை பீடாதிபதிகளை சந்தித்து, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தம்மீது சுமத்தியுள்ள குற்றவியல் குற்றச்சாட்டுகளில் இருந்து தம்மை விடுவிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தனர்.

இந்த இரண்டு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளும் ஒழுக்கமற்ற மற்றும் சட்டவிரோதமான செயலைச் செய்துள்ளனர். உத்தியோகபூர்வ வாகனங்களில் சீருடையில் சென்று மூன்றாம் தரப்பினரிடம் சட்டவிடயங்களைப் பற்றி பேசியமையும், பொலிஸ் மா அதிபரிடம் அனுமதி பெறாமையும் குற்றம்' என முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் எம்.ஜி.பி. கொடகதெனிய குறிப்பிட்டுள் ளார். இந்த விடயம் தொடர்பாக பொலிஸ் மா அதிபர் விசாரணை நடத்தாமை பிரச்சினைக்குரிய விடயம் என அவர் குறிப்பிட்டுள்ளார். தனிப்பட்ட நலனுக்காக சீருடை மற்றும் வாகனங்களைப் பயன்படுத்தியமை மற்றும் சீருடையிலேயே ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தமை தவறு என முன்னாள் செயலாளர் அசோக பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்கத் தவறியதாக ஜனாதிபதி ஆணைக்குழு குற்றம் சாட்டியுள்ள நிலையில், அவர்கள் நீதிமன்றங்களின் உதவியை நாடாமல் வேறு வழிகளில் தம்மை விடுவிக்க முயற்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என அசோக பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய பொலிஸ் அதிகாரிகளுடன் இதுபோன்ற பயணங்ளை மேற்கொள்ள வேண்டுமெனின், பொலிஸ் மா அதிபரிடம் முன் அனுமதி பெற வேண்டும். அவ்வாறில்லாமல் உங்களால் உத்தியோகபூர்வ வாகனங்களில் இதுபோன்று சீருடையுடன் பயணிக்க முடியாது.

பொலிஸ் மா அதிபரும், பொலிஸ் ஆணைக்குழுவும் இது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும். – என முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மெரில் குணரத்ன குறிப்பிட்டுள்ளார்.

தமக்கு ஏதாவது ஓர் ஆணைக்குழு அல்லது நீதிமன்றத்தால் அநீதி இழைக்கப்பட்டிருப்பதாகக் கருதினால் அவர்கள் நீதித்துறையின் உதவியை நாடியிருக்க வேண்டுமென, பெயர் குறிப்பிட விரும்பாத அமைச்சொன்றின் முன்னாள் செயலாளர் ஒருவர் கூறியுள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக தமக்கு நீதி கிடைக்கும் என நம்பினேன் எனவும், எனினும் அவ்வாறு எதுவும் இடம்பெறாத நிலையில் தான் இந்தத் தீர்மானத்துக்கு வந்தேன் எனக் குறிப்பிட்டுள்ள சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நந்தன முனசிங்க 'யாரும் எதுவும் சொல்வதில் எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை' எனக் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற சமயத்தில், நீர்கொழும்பு பிரதேசத்துக்குப் பொறுப்பாக செயற்பட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், தாக்குதலைத் தடுக்கத் தவறினார் என ஜனாதிபதி ஆணைக்குழு குற்றஞ்சாட்டியுள் ளதோடு, மேல் மாகாணத்துக்குப் பொறுப்பாக தாக்குதல் சமயத்தில் செயற்பட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நந்தன முனசிங்கவிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய பரிந்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 5 ஆவது அலை ஏற்படுமாயின் மீள்வது மிகவும் கடினமாகும்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

டெல்டா திரிவால் ஏற்பட்டுள்ள கொவிட் அலையில், ஒருவரிடமிருந்து 8 பேருக்கு வைரஸ் பரவும் அபாயம் உள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில், சங்கத்தின் மத்தியகுழு மற்றும் ஊடகக் குழு உறுப்பினரான வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் தற்போது தீவிரமாகப் பரவி வரும் நான்காவது கொவிட் அலையில் டெல்டா திரிபால் ஒரு நபரிடமிருந்து 8 பேருக்கு வைரஸ் பரவக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது. ஆரம்பகாலத்தில் இந்த கொவிட் வைரஸ் ஒருவரிடமிருந்து 2.5 நபர்களுக்கு பரவக் கூடியதாக இருந்தது. அதன் பின்னர் வந்த அல்பா திரிவானது ஒரு நபரிடமிருந்து 4.5 நபர்களுக்குப் பரவக் கூடியதாக இருந்தது.

முதலாவது அலையில் மரணவீதம் 0 இற்கும் குறைவாகக் காணப்பட்டது. எனினும், தற்போது மரண வீதமா னது 4 – 5 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.இதனூ டாக தற்போதைய கொவிட் பரவலின் வீரியத்தை எம்மால் ஊகித்துக் கொள்ள முடியுமானதாக இருக்கும்.

மேலும் பல திரிவுகளால் இலங்கையில் ஐந்தாவது அலையொன்று ஏற்படுமாயின் அதிலிருந்து நாம் மீளுவது என்பது மிகக் கடினமானது என்றும் தெரிவித்துள்ளார்.

# பயணக்கட்டுப்பாட்டை கடுமையாக்குங்கள்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

பயணக் கட்டுப்பாடுகள் 80 முதல் 90 சதவிகிதம் வரை மேலும் கடுமையாக்கப்பட வேண்டும் என்றும் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள், முறையாக செயற்படுத்தப்பட வேண்டும் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரியுள்ளது.

ஊடகங்கள் மத்தியில் உரையாற்றிய, அரச மருத்துவ சங்கத்தின் உதவி செயலாளர் வைத்திய அதிகாரி சமந்த ஆனந்த இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

சுகாதார அமைச்சின் தொழில்நுட்பக் குழுவே எந்த நேரத்தில் எப்படி பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுகாதாரத்துறை பணிப்பாளரின் கீழ் இயங்கும் தொழில்நுட்பக்குழு எடுக்கும் முடிவுகள் தொழில்நுட்ப முடிவாக இருக்க வேண்டும். தொழில்நுட்ப முடிவுகளை இராணுவம் மற்றும் பொலிஸார் அமுல்படுத்த வேண்டும்.

முடிவுகளை சரியாக செயற்படுத்தவில்லை என்றால் மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரச மருத்துவ சங்கத்தின் உதவி செயலாளர் வைத்திய அதிகாரி சமந்த ஆனந்த கேட்டுள்ளார்.

தொழில்நுட்ப முடிவைத் தவிர செய்தித்தாள்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சிகளுக்கு மாத்திரம் அறிக்கைகளை வழங்கி தொற்றை கட்டுப்படுத்த முடியாது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# எங்களது கண்ணீரும் தோற்றுப் போனது மங்கள மறைவு; வேதனையில் சந்திரிகா



அன்புக்குரிய மங்கள, என் நண்பர், சகோதரர். இந்த இருண்ட நாளில் நீங்கள் உங்கள் வாழ்க்கையை இழந்துவிட்டீர்கள். உங்களுக்காக நாங்கள் பிரார்த்தனைகள்செய்தோம். கண்ணீர்விட்டோம். ஆனால் அனைத்தும் தோற்றுப் போயின என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி மரணமடைந்தார்.

அவரது உடல் கடந்த செவ்வாய் மாலை பொரள்ளை பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

சர்வதேச இராஜதந்திரிகள், இலங்கை அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட பலர் மங்களவின் மறைவிற்கு தமது அனுதாபங்களை வெளியிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் மங்கள சமரவீரவின் நெருங்கிய நண்பரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க தனது அனுதாபங்களை வெளியிட்டுள்ளார்.

தனது மீக நீண்ட கால நண்பரான மங்கள சமரவீர கொரோனாத் தொற்றுக்குள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் சமயம் விரைவில் அவர் நலம் பெற்று வர வேண்டும் என பதிவிட்டிருந்தார்.

இந்த நிலையில் மங்கள சமரவீர உயிரிழந்த பின்னர் அவரின் உடலை தகனம் செய்ய கொண்டு சென்ற போது பொரள்ளை பொது மயானத்தின் வெளியே சோகமே உருவாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா நின்றிருந்தமை பார்ப்பவர்களின் மனதை மிக வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

மங்கள சமரவீரவின் மறைவு தொடர்பில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குறிப்பிடுகையில், மங்கள, நீங்கள் இன்னும் இறக்கவில்லை. இலங்கையை கட்டியெழுப்ப முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு போராட்டத்திலும் நீங்கள் உயிர்வாழ்வீர்கள்.

அநீதி மற்றும் ஊழலுக்கு எதிராக நிற்கும் அனைவரின் இதயங்களிலும் செயல்களிலும் நீங்கள் வாழ்வீர்கள்.

பல்வேறு அமைச்சுப் பதவிகளில் நீங்கள் செய்த மகத்தான சேவையை நான் எப்போதும் நினைவில் கொள்வேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# முன்னாள் அமைச்சர் மங்கள ஒரு சிறந்த தேசபக்தர் ஆவார்!

## சமந்தா பவர் புகழாரம்



சர்வதேச மேம்பாட்டுக்கான அமெரிக்க நிறுவனமான யுஎஸ்எயிட் இன் நிர்வாகி சமந்தா பவர், மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவை ஒரு சிறந்த தேசபக்தர் மற்றும் அரசியல்வாதி என்று வர்ணித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் அமெரிக்கத் தூதுவரான சமத்ந்தா பவர், மங்கள சமரவீரவின் மறைவால் தான் மிகவும் மன உளைச்சலுக்கு ஆளானார் எனக் கூறியுள்ளார்.

மங்கள சமரவீர, நீதிக்காகவும் நல்லிணக்கத்திற்காகவும் போராடினார்.

வெளியுறவு அமைச்சராக இருந்தபோது, காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகத்தை உருவாக்கவும், போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உயிர் பிழைத்தவர்களுக்கும் இழப்பீடு வழங்கவும் அவர் முயற்சிகளை மேற்கொண்டார் என்றும் சமந்தா பவர் குறிப்பிட்டுள்ளார்.

# மசகு எண்ணெய், பெற்றோலியப் பொருள்களை நீண்டகால கடனடிப்படையில் அரசு பெற முயற்சி

இலங்கையில் உள்ள ஐக்கிய அரபு இராச்சிய தூதரகத்தின் பதில் தலைவரான சைஃப் அலனோபியுடன் சக்திவள அமைச்சர் உதய கம்மன்பில கலந்துரையாடலொன்றை முன்னெடுத்துள்ளார்.

இதன்போது, இலங்கை நீண்ட கால கடன் வசதியில் மசகு எண்ணெய் மற்றும் பெற்றோலியப் பொருள்களைப் பெறுவதற்கான திட்டம் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளார். குறித்த சந்திப்பு கடந்த திங்கட்கிழமை நிகழ்ந்துள்ளதாக சக்திவள அமைச்சர் உதய கம்மன்பில தனதுடுவிட்டர்பக்கத்தில்தெரிவித்துள்ளார்.

தற்போதைய அந்நிய செலாவணி நெருக்கடிக்குத் தீர்வாகவே இந்தக் கலந்துரையாடல் நிகழ்ந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

# பஸ் உரிமையாளர் மற்றும் ஊழியர்களுக்கு அடுத்தவாரம் முதல் நிவாரணம் கிடைக்கும்

வருமானத்தை இழந்துள்ள பஸ் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அடுத்த வாரம் முதல் நிவாரணம் வழங்கப்படவுள்ளது எனப் போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்குத் தேவையான இறுதிக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனப் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

வாகன உதிரிப்பாகங்கள், பற்றிகள், டயர்கள், எண்ணெய் வகைகள் மற்றும் காப்புறுதி, லீசிங் கட்டணங்களுக்கான ஒரு தொகைப் பணத்துக்குரிய வவுச்சர்கள் வழங்கப்படவுள்ளன.

இதனைத் தவிர, வருமானம் இழந்துள்ள பஸ் ஊழியர்கள் தங்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய பணத்துக்கான வவுச்சர்களும் வழங்கப்படவுள்ளன.

இந்த நிவாரண செயற்றிட்டம் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படும். இதேவேளை, அத்தியாவசிய சேவைகளுக்காக தனியார் பஸ்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. – என்றார்.

# மாறுபட்ட அரசியல் கொள்கைகளால் மனிதாபிமானத்தை மறைக்க முடியாது!

## மங்களவின் மறைவு இதை உணர்த்தியுள்ளது என்கிறார் டலஸ்

மாறுபட்ட அரசியல் கொள்கைகளால் மனிதாபிமானத்தை மறைக்க முடியாது என்பதை முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவு உணர்த்தியுள்ளது என வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும குறிப்பிட்டுள்ளார்.

மாத்தறை மாவட்ட நபராகவும், ஊடகவியலாளராகவும், தற்போதைய ஊடகத்துறை அமைச்சர் என்ற ரீதியில் முன்னாள் அமைச்சர் மறைந்த மங்கள சமரவீர தொடர்பில் என்னுள் மறக்க முடியாத நினைவுகள் காணப்படுகின்றன.

உயிரைப் பணயம் வைத்து 1990 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் கலவரங்களுக்கு எதிராகப் பேனாவுடன் போராடிய மாறுபட்ட பத்திரிகையாளராகிய எமக்கு அன்று மங்கள சமரவீர சிறந்த தோழரானார்.

மனித உரிமைக்காக அன்று அவர் வழங்கிய தைரியத்தால் கொல்லப்பட்ட 60 ஆயிரம் பேருக்கும், குழந்தைகளின் இரத்தத்துக்கும், கண்ணீருக்கும் கௌரவரமளிக்கப்பட்டது. இதனால் இவர் மாத்தறைக்கு மங்கள இலட்சினையாக காணப்பட்டார்.

மங்கள சமரவீர ஏற்றுக் கொள்ளக் கூடிய கொள்கையை உடையவர். தனிப்பட்ட மற்றும் அரசியல் ரீதியில் இலாபம் பெறாத வகையில் கொள்கையைக் கொண்டிருந்தார். மனச்சாட்சிக்கு அமைய செயற்படுபவர். -என்றார்.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவர் ஊடகத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டமையை தொடர்ந்து நாட்டின் ஊடகத்துறை நவீன பரிணாமத்துடன் வளர்ச்சியடைந்தது.



நவீன மற்றும் தகவல் துறையை அடிப்படையாகக் கொண்டு ஊடகத்துறை முன்னேற்றமடைந்தது. மாறுபட்ட பல்வேறு அரசியல் கொள்கையால் மனிதாபிமானத்தை மறைக்க முடியாது என்பதை உணர்த்தி மங்கள சமரவீர எம்மை விட்டு நீங்கியுள்ளார்.

# அரசியலில் பாரிய மாற்றத்தை கொண்டுவர செயற்படும் நிலையில் மங்கள உயிரிழப்பு!

## ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு என்கிறார் ஹிஸ்புல்லா

அரசியலிலேமிகப்பெரியபங்கைவகித்த அமைச்சர் மங்கள சமரவீரவின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையும், துக்கமும் அடைகிறேன் என கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநரும், முன்னாள் பிரதி அமைச்சருமான ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அனுதாப அறிக்கையில் –

இலங்கையின் தென்பகுதியில் இருந்து அரசியலுக்குள் நுழைந்து மிகவும் நேர்மையாக அரசியலைச் செய்த ஒருவர். குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினுடைய வளர்ச்சியிலே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவுடன் இணைந்து ஜனாதிபதித் தேர்தலில் கட்சி மீண்டும் ஆட்சி அமைக்க பங்கு வகித்த ஒருவர்.

அவரது அமைச்சிலே தபால் தொலைத்தொடர்பு, ஊடகத்துறை பிரதி அமைச்சராக சுமார் 6 வருடங்கள் கடமையாற்றியுள்ளதோடு அவரின் கீழ் நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் தலைவராகவும் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் தலைவராகவும் கடமையாற்றி உள்ளேன்.

மிகவும் இனிமையான சுபாவமும், எச் சந்தர்ப்பத்திலும் லஞ்சம், ஊழல் போன்றவற்றுக்குத் துணை போகாத ஒருவராகச் செயற்பட்டவர். அரசியலில் மிக நேர்மையாக செயற்பட வேண்டும் என்பதில் மிகவும் கண்டிப்பான ஒருவர்.

அரசியலில் மிக மோசமான, பிழையான நிலைமைகள் வருகின்ற போது கட்சிகளை விட்டு வேறு கட்சிக்கு மாறிய ஒருவர். முஸ்லிம்களுக்கு எதிராகப் பேரினவாதிகள் கடுமையான செயற்பாடுகளின் போது அதற்கு எதிராக மாத்தறையிலே முஸ்லிம்களைப் பாதுகாக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்து முஸ்லிம் சமூகத்திற்காகக் குரல் கொடுத்த ஒரு சகோதரர்.

அது மாத்திரமன்றி தமிழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும், அவர்களுக்கு யுத்த காலத்திலே ஏற்பட்ட இழப்புக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட வேண்டும், சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதிலே மிகக் கவனமாக இருந்த ஒருவர்.

ஐக்கிய நாடுகள் சபையில் கூட சிறுபான்மை இனங்கள் பாதிக்கப்படுகின்றமையை உறுதி செய்யப்பட வேண்டும் என்பதில் அவர் ஆற்றிய உரையால் தென் இலங்கையில் சர்ச்சைக்குள்ளாகிய ஓர் அமைச்சர்.

சிறுபான்மை இனங்களை அரவணைத்துக் கொண்டே நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதிலே மிகவும் கரிசனையான ஒருவர். 1989 ஆம் ஆண்டு என்னோடு நாடாளுமன்றத்திற்கு எதிர்க்கட்சியில் இருந்து 1994 ஆம் ஆண்டு ஆட்சி அமைத்தது முதல் பொதுஜன ஐக்கிய முன்னணி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினுடைய வளர்ச்சியிலே மிகக் கடுமையான பங்களிப்புக்களைச் செய்த ஒருவர்.

எதிர்காலத்திலே அரசியலில் பாரிய மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு இரவு பகலாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் போது இவ்வாறான மரணம் ஏற்பட்டிருக்கின்றது.



அவரது குடும்பம், நண்பர்களோடு பழகிய ஒருவன் என்ற அடிப்படையில் மிகவும் ஆழ்ந்த கவலை அடைகின்றேன்.

இவ்வாறான தலைமைகளை இந்நாடு இக்காலகட்டத்திலே இழந்தமை மிகவும் துரதிஷ்டமானது. அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.08.2021 இல் வெளியிடப்பெற்றது.